
ISSN 1391-9504

# Vijey விஜய்

18.11.2015 - மலர் 12, இதழ் 38

Public Library
Jaffna



## மரணத்தை வெல்ல முயற்சிக்கும் விஞ்ஞானி!

## செவ்வாய் சென்றால் உண்ணும் உணவுகள்




விலை ரூபா 15/-

நெக்டோ பென்ச்சாவின் கதை

(11ஆம் பக்கம்)

## காலநிலை அளவீடுகள்




## குப்பைகளை முறையாக அகற்றுவோம்




மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1. படுக்கையறை, சமையலறை, குளியலறை என்ற அடிப்படையில் இங்குள்ளவற்றை வகைப்படுத்தி, உரிய இலக்கங்களை எழுதுக.




படுக்கையறை: .................................................

சமையலறை : .................................................

குளியலறை : .................................................


2. படத்தில் உள்ளவை தவிர, உங்கள் வீட்டு சமையலறையில் காணப்படும் பொருட்கள் 5 தருக.

.................................................................

3. பொதுவாக மழை, வெயில் என்பனவற்றிலிருந்து பாதுகாப்பதற்கு வீட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பகுதி எது?

.................................................................

இங்குள்ள காட்சிகள் இடம்பெற வேண்டிய ஒழுங்குமுறையை 1, 2, 3, 4 என முறையே இலக்கமிட்டுக் காட்டுக.



ஜோர்ஜ் மற்றும் அவரது இரண்டு பிள்ளைகளையுமே படத்தில் காண்கிறீர்கள். ஜோர்ஜின் மகன் பாடசாலை செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றான்.



1. ஜோர்ஜ் என்ன செய்துகொண்டிருக் கிறார்?

..............................

2. ஜோர்ஜின் மகள் தனது கையில் பால் போத்தலை வைத்தி ருக்கின்றாள். இது;

சரியானது/
பிழையானது

3. இந்தக் காட்சி குறிக்கும் வேளை யாது? அதனை உறுதிப்படுத்தும் வகையிலான காரணங்கள் 2 தருக.

.................................................................

1. .................................................................

2. .................................................................

ஒவ்வொரு வாக்கியத்திலும் வழங்கப்பட்டுள்ள படங்களையும் பொருத்தமான சொல்லையும் வைத்து, அந்த வாக்கியத்தை மீண்டும் எழுதுக.

1.  விட  (வேகம் குறைவாகச்/ வேகமாகச்) செல்லும்.

*உதாரணம்: சைக்கிளைவிட கார் வேகமாகச் செல்லும்.*

2. உலகிலுள்ள  அனைத்திலும்  யே (மிகப் பெரியது/மிகச் சிறியது)

.................................................................

3.  ஆனது  விட (அளவில் சிறியது/ பிரகாசம் கூடியது/ பிரகாசம் குறைந்தது) ஆகும்.

.................................................................

4. பீற்றர் உடல் பருமன்  (குறைந்தவர்/ கூடியவர்) ஆவார்.
அவரது நண்பனான ஜேம்ஸ் உடல் பருமன்  (உயரமானவர்/ குறைந்தவர்/ கூடியவர்) ஆவார்.

.................................................................

- ஜீநு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமுத்திரத்திலுள்ள பாதரசத்தை அகற்ற புதிய முறை கண்டுபிடிப்பு



ஃப்லிண்டர்ஸ் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள், சமுத்திரத்தில் உள்ள பாதரசத்தை அகற்றுவதற்கான ஒரு வழிமுறையினை தற்செயலாகக் கண்டுபிடித்துள்ளனர். தொழிற்துறைக் கழிவும் தோடம்பழத் தோலுமே இந்த விஷப் பாதரசத்தை அகற்றுவதற்கு தற்போது பயன்படுத்தப்படவுள்ளன. இதுவொரு விசேட 'பொலிமர்' (Polymer) வகையாகும். இதன்மூலம் பாதுகாப்பாகவும் செலவின்றியும் சமுத்திரத்தில் உள்ள பாதரச உலோகக் கழிவினை அகற்ற முடியும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

## சல்பர்-லிமோனின் பொலிசல்பைட்

அவுஸ்திரேலியாவின் ஃப்லிண்டர்ஸ் பல்கலைக் கழகத்தின் செயற்கை ரசாயன விஞ்ஞானிகளான மெக்ஸ் வர்த்திங்டன் மற்றும் ஜஸ்டின் வோக்கர் ஆகியோரே இந்த பொலிமர் வகையை கண்டுபிடித்துள்ளனர். இதனை 'சல்பர் -லிமோனின் பொலிசல்பைட்' (Sulfur-limonene polysulphide) என்று அழைக்கின்றனர். இதில் சல்பர் மற்றும் லிமோனின் ஆகிய பதார்த்தங்கள் உள்ளடங்கியுள்ளன. இவை எண்ணெய்த் தன்மையுடைய சிட்ரஸ் பழங்களின் தோல்களில் அடங்கியிருப்பவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடிய- அப்புறப்படுத்தப்படும் சிட்ரஸ் தன்மையுடைய பழத்தோல்களில் இருந்தே இந்த பொலிமர் உருவாக்கப்படுவதனால், பாரியளவிலான சுற்றாடல் சுத்தப்படுத்தல்களுக்கும் இவற்றைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.




இந்த முறையைப் பயன்படுத்தி பாதரசத்தை அகற்றுவது மிகவும் இலாபகரமானது-இலகுவானது-வினைத்திறன் மிக்கதுமாகும். நீரைத் தவிர, இந்த பொலிமர் வகையினால் மண்ணைக்கூட சுத்தம் செய்ய முடியும். அத்துடன், இதனை மீள் சுழற்சிப் பயன்பாட்டுக் குட்படுத்தவும் முடியும் என்பதுவும் குறிப்பிடத் தக்கதொரு சிறப்பம்சமாகும்.




## பாதரசத்தை கண்டறிதல்

பாதரசம் என்பது உணவு மற்றும் நீரினை மாசுபடுத்துகின்ற, மனிதர்களுக்கு அதிக கெடுதலை ஏற்படுத்தக்கூடிய நச்சுப் பதார்த்தமாகும்.



ரசாயன விஞ்ஞானிகளான மெக்ஸ் வர்த்திங்டன் மற்றும் ஜஸ்டின் வோக்கர் ஆகியோர் பொலிமர் வகை மாதிரி பரிசோதனையின்போது...

இது,மனித உடலின் நரம்புத் தொகுதியில் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடியது. ரசாயன விஞ்ஞானியான ஜஸ்டின் வோக்கரின் கருத்தின்படி, பெற்றோலியம்சார் உற்பத்திகளின்போது சுமார் 70 மில்லியன் தொன் சல்பர் வெளியாகின்றது. அத்துடன், வருடாந்த சிட்ரஸ் உற்பத்திகள்மூலம் சுமார் 7 ஆயிரம் தொன் லிமோனினைப் பெறக்கூடியதாகவும் இருக்கின்றது. ஆக, இவ்விரண்டு உப உற்பத்திப் பொருட்களையும் பயன்படுத்தி இந்த புதியவகை பொலிமர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்த பொலிமர் செந்நிறமானது. நீரிலுள்ள பாதரசத்தை உறிஞ்சிக் கொள்ள மட்டுமன்றி, பாதரசத்தை கண்டறியவும் இதனால் முடியும்.

இதனை நடைமுறைக்குக் கொண்டுவரும் வகையில் வணிக ரீதியில் இந்த பொலிமர் வகையை உற்பத்தி செய்ய ஃப்லிண்டர்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தற்போது தீர்மானித்துள்ளனர்.

## நரம்புத் தொகுதிக்கு பாதிப்பு

தொழில்நுட்ப புரட்சியின் பின்னர் எமது சுற்றாடலில் உள்ள பாதரசத்தின் அளவு மிக வேகமாக அதிகரித்துச் செல்கின்றது. ஆறு, ஏரி, குளம் மற்றும் சமுத்திரங்களில் பாதரசம் அதிகளவில் காணப்படுகின்றது. சமுத்திரத்தைப் பொறுத்தமட்டில், அங்குள்ள பாதரசத்தின் அளவு மும்மடங்கு அதிகமாகும். சமுத்திரத்தில் பாதரசம் இருப்பதனால், எமக்கு என்ன பாதிப்பு? என்று நீங்கள் கருதக்கூடும். நாம் கடல்வாழ் உயிரினங்களையும் தாவரங்களையும் உட்கொள்கின்றோம். சிறிய மீன்களை இரையாக்கிக்கொள்ளும் பெரிய மீன்களுக்குள் பாதரசம் கடத்தப்படுகின்றது. அத்தகைய கடல்வாழ் உயிரினங்களை நாம் உட்கொள்ளும்போது, பாதரசம் எமது உடலுக்குள் செல்வதனால், எமது நரம்புத் தொகுதிக்கு பாதிப்பு ஏற்படுத்தப் படுகின்றது. (-இ)

விஜய Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஊரில் ஒரு பணக்காரர் இருந்தார். அவரிடம் பணம், பொருள், பணியாட்கள் என எல்லா வசதிகளும் இருந்தன. அதே ஊரில் ஓர் ஏழை விவசாயி இருந்தார். அவரிடம் எந்த வசதியும் இல்லை. அவரிடம் இருந்ததெல்லாம் இரவில் படுத்துத் தூங்குவதற்கு ஒரு பழைய குடிசை மட்டும்தான்.

அந்தப் பணக்காரருக்கு, ஏழை விவசாயியைப் பார்க்கும்போதெல்லாம், தன்னைக் காட்டிலும் அந்த விவசாயி மிகவும் சந்தோஷமாக இருப்பதாகத் தோன்றியது. தம்மிடம் இல்லாத சந்தோஷம் விவசாயியிடம் மட்டும் எப்படி இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளும் ஆவலில் ஒரு சாமியாரைத் தேடிப் போய்ப் பார்த்துக் காரணம் கேட்டார்.

சாமியார் சற்று நேரம் யோசித்துவிட்டு அதற்கான காரணத்தைச் சொன்னார். "உன்னிடம் அளவுக்கு மீறிய பணம் இருக்கிறது. அவனிடம் அவனது அவசியத்திற்கான பணம் இல்லை. அதுதான் உனது சந்தோஷமின்மைக்கும் அவனது சந்தோஷத்திற்கும் காரணம்" என்றார். சாமியார் சொன்ன காரணத்தைப் பணக்காரரால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் சாமியாரிடம், "அது எப்படி? பணம் மனிதனின் மிக முக்கிய தேவை அல்லவா? அது இல்லாமல் ஒருவனால் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும்?" என்று கேட்டார். பணக்காரரின் கேள்விக்குப் பதிலாக ஒரு யோசனையைக் கூறினார் சாமியார்.

"நான் சொன்ன உண்மையை நீ உணர வேண்டுமானால், தொண்ணூற்று ஒன்பது ருபா பணத்தை அந்த விவசாயியிடம் கொடுத்துப் பார். அதன்பின் அந்த விவசாயி, உன் சந்தேகத்தைத் தீர்த்து வைப்பான்" என்றார்.




சாமியார் சொன்னதைப் போலவே, பணக்காரர் அந்த விவசாயியை வரழைத்து, 99 ருபாயை வற்புறுத்தி அவரிடம் கொடுத்து அனுப்பினார். ஒருவாரம் சென்றது. அந்த விவசாயி, பணக்காரரைச் சந்தித்து, அவர் கொடுத்த ருபாயைத் திருப்பிக் கொடுத்து, "இந்தப் பணம் எனக்கு வேண்டாம். நீங்களே திரும்ப வாங்கிக்கொள்ளுங்கள்" என்றார். பணக்காரருக்கு மறுபடியும் ஒன்றும் புரியவில்லை. "இதை நான் உனக்குக் கடனாகத் தரவில்லை. சும்மாதான் கொடுத்தேன். நீயே வைத்துக்கொள்" என்று கட்டாயப்படுத்தினார்.

அந்த விவசாயி அந்தப் பணத்தை ஏற்க மறுத்துவிட்டார். அதற்கு அவர் காரணமும் சொன்னார். "இந்தப் பணம் இல்லாத வரையில் நான் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருந்தேன். இது வந்த பின்னர், இதைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு வந்துவிட்டதால், இரவில் என்னால் நிம்மதியாக தூங்கக்கூட முடியவில்லை. இதைப் பத்திரப்படுத்தி வைக்க என்னிடம் பெட்டியோ, பூட்டோ, சாவியோ இல்லை. அது மட்டுமல்லாமல் இந்த 99 ருபாயை வைத்து 100 ருபாய்க்கு மேலாகவும் சம்பாதிக்க என்ன செய்யலாம் என்கிற கவலை என்னைப் பற்றிக் கொண்டது. இந்தப் பணம் எனக்கு வேண்டவே வேண்டாம்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பிப் போய்விட்டார். பணக்காரர் ஆடிப்போய்விட்டார். இந்த 99 ருபாயே அந்த விவசாயியின் ஒருவார கால சந்தோஷத்தைக் கெடுத்ததுடன் அவனைக் கவலைப்படவும் வைத்துவிட்டது என்றால் தம்மிடமுள்ள மொத்த பணத்துக்கும் தமது ஆயுள் முழுவதும் தூங்காமல் கவலைப்பட்டுக்கொண்டும்தான் இருக்க வேண்டும் என்பது அவருக்குப் புரிந்தது. சாமியாரின் தத்துவமும் அவரது மனத்தில் ஒரு தெளிவை ஏற்படுத்தியது.

மிதமிஞ்சிய பணம் உள்ளவன் அதனை எப்படி பாதுகாப்பது என்ற குழப்பத்திலேயே நிம்மதியின்றி வாழ்வான் என்பதையே இக்கதை உணர்த்துகின்றது.

# பறக்க ஆசைப்பட்ட செடியன்

ஒரு கிராமத்தில் செடியன் என்று ஒரு சிறுவன் இருந்தான். அவன் செடியளவு உயரம்தான் வளர்ந்திருந்தான். அதனால் அவனுக்கு அந்தப் பெயர். செடியனுக்கு பறவைகள் போல பறக்க ஆசை.

ஆனால் தான் மற்றவர்கள் மாதிரி சராசரி உயரம் இல்லையே. தம்மால் உயரப் பறக்க முடியுமா? என்ற சந்தேகம் அவனுக்கு எழுந்தது. ஒரு சிட்டுக்குருவி யிடம் தனது சந்தேகத்தைக் கேட்டான் செடியன். "செடியா! நான் உன்னைவிட உருவத்தில் மிகவும் சிறியவன். ஆனால், என்னாலேயே பறக்க முடியும் போது, உன்னால் பறக்க முடியாதா என்ன?" என செடியனின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக கூறியது சிட்டுக் குருவி.



"ஆமாம், ஆமாம்... என்னால் பறக்க முடியும்" என்று சொல்லிக்கொண்டே ஆற்றுப் பக்கம் வந்தான் செடியன். அங்கு நாரைகள் மீன்களைப் பிடித்து சாப்பிட்டுக்கொண்டே இருந்தன. செடியன் ஒரு நாரையின் அருகே சென்றான். "பறவையே எனக்கு ஒரு உதவி செய்வாயா?" எனக் கேட்டான். "என்ன உதவி?" எனக் கேட்டது நாரை.

"உன்னோட இறக்கையில் இருந்து ஒரே ஒரு இறகைத் தருவாயா? நான் பறக்க வேண்டும்" என்று கேட்டான். அந்த நாரையும் ஒரு இறகைக் கொடுத்தது. மகிழ்ச்சியோடு வாங்கி தன்னுடன் வைத்துக்கொண்டான். இதுபோல் பல நாரைகளிடம் இருந்து ஒவ்வொரு இறகாக வாங்கி சேகரித்துக் கொண்டான். அங்கிருந்து மகிழ்ச்சியோடு கிளம்பி, கோயில் அருகே வந்தான். அங்கே பூ விற்றுக்கொண்டிருந்த ஒரு பாட்டியிடம் பேசினான்.

"பாட்டி இந்த இறகுகளை பறவை இறகுகள் மாதிரி கட்டிக் கொண்டு பறக்கப் போகிறேன். எனக்கு இறகுகளை கட்டிக் கொடுக்க முடியுமா?" என்று கேட்டான் செடியன். "நான் கட்டிக் கொடுத்தால் எனக்கு நீ என்ன தருவாய்?" என்று கேட்டார் பாட்டி. "நான் பறந்து போய் மலைக்கு அந்தப் பக்கம் உள்ள பூக்களைப் பறித்து வந்து தருகிறேன்" என்று சொன்னான் செடியன்.

பாட்டியும் இறகுகளை வைத்து கட்டிக் கொடுத்தார். அதை உடம்பில் கட்டிக் கொண்டு மலை உச்சிக்குப் போனான். அங்கிருந்து பறக்க முயற்சி செய்தான். ஆனால், செடியனால் பறக்க முடியவில்லை. பறவை இறகுகளைக் கட்டினால் மட்டும் பறந்துவிட முடியுமா என்ன? எவ்வளவோ முயற்சி செய்தான். அவனால் பறக்க முடியவில்லை. தோல்வி அடைந்த அவன் கோபத்தினால் உடம்பில் கட்டியிருந்த இறகுகளைக் கழற்றி வீசினான்.

அது மலையின் கீழே ஓடிக்கொண்டிருந்த நதியில் போய் விழுந்தது. நீரினால் வேகமாக அடித்துச் செல்லப்பட்ட அந்த இறகுகள் அந்தக் கரையில் குளித்துக்கொண்டிருந்த காட்டு இளவரசியின் கால்களைச் சுற்றிக்கொண்டது. இளவரசி அதனைக் கையில் எடுத்தாள். இவ்வளவு இறகுகளுடன் யார் இதை இங்கே அனுப்பியது என்று தெரிந்துகொள்ள ஆர்வம் ஏற்பட்டது. தனது சேவகர்களோடு அந்த மலைமீது ஏறிவந்தாள் இளவரசி, அங்கே செடியன் ஒரு மரத்தைக் கட்டிக்கொண்டு அழுதுகொண்டிருந்தான். சேவகர்களோடு வந்த இளவரசி, "யார் நீ? ஏன் அழுகிறாய்?" என்று கேட்டாள்.

செடியன் தனது கதையைச் சொன்னான்.

இளவரசி சிரித்தாள். "நாமெல்லாம் மனிதர்கள். நம்மால் பறக்க முடியாது. ஆனால், சாதனை செய்ய முடியும் என்ற உனது தன்னம்பிக்கை எனக்குப் பிடித்துவிட்டது. அதனால், உன்னை அரண்மனையில் இளைஞர் மன்றத்தின் தலைவனாக நியமிக்க ராஜாவிடம் சொல்கிறேன்" என்றாள்.

இதைக் கேட்டதும் செடியனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அன்று முதல் அவன் வாழ்வில் வசந்தம் வீச ஆரம்பித்தது. கிடைத்த சம்பளத்தில் தனக்கு உதவிய அத்தனை பறவைகளுக்கும் தானியங்களை வாங்கி வந்து கொடுத்தான். பறவைகளும் சந்தோஷத்தில் செடியனை வாழ்த்தின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் கவரும் 'பினர'



✱ தாவரவியல் பெயர்: *Exacum trinervium*

Gentianaceae தாவர குடும்பத்தைச் சேர்ந்த பினர மலர், 'கினிஹிரியா' என்றும் அழைக்கப்படுகின்றது. இத்தாவர இனம், மலைசார்ந்த பகுதிகளில் புதர்களாக வளரும். குறிப்பாக, மத்திய மலைநாட்டில் இத்தாவர இனத்தைக் காண முடியும். ஜனவரி தொடக்கம் ஜூன் வரையான காலப்பகுதியிலும், செப்டெம்பர் தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியிலும் இதில் பூக்கள் பூக்கும். இது மருத்துவ குணம் மிக்க தாவரமாகும்.

இலங்கையில் Exacum தாவரப் பிரிவினைச் சேர்ந்த பினர தாவரத்தில் எட்டு இனங்கள் காணப்படுகின்றன. இவற்றில் வெள்ளை, கருநீலம், ஊதா நிறப் பூக்கள் பூக்கும் தாவரங்களும் அடங்கும். இவற்றுள் ஐந்து இனங்கள் இலங்கைக்கே உரித்தானவையாகும். அவையாவன: *Exacum trinervium, Exacum pallidum, Exacum axillare Exacum macranthum, Exacum walkeri* இந்த பிரத்தியேக இனங்கள் யாவும் அழியும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ள தாவரங்கள் என்று செந்தரவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.



# இங்கு, நுளம்புகளுக்கு இடமில்லை...!



வார இறுதியில் எப்படியாவது நேரத்தினை மிச்சப்படுத்திக் கொண்டு வீட்டுத் தோட்டத்தினை சுத்தப்படுத்துவது ரவியின் குடும்பத்தாரின் வழக்கமாகும்.

தோட்டத்தில் ஆங்காங்கே காணப்படும் பொலித்தீன் பைகள், ஷொப்பிங் பேக்குகள், யோகட் கோப்பைகள், போத்தல் மூடிகள், சிரட்டைகள் என்பனவற்றை அனைவரும் ஓரிடத்தில் குவித்துவிட, அப்பா அவற்றை ஒரு குழியைத் தோண்டி புதைத்துவிடுவார். அல்லது குப்பை சேகரிக்க வருவோரிடம் கொடுத்து விடுவார்.

எல்லோரும் தோட்டத்தினை சுத்தம் செய்ய உதவ வேண்டும் என்பதே அப்பாவின் அபிப்பிராயமாகும். ஏனெனில், குப்பைகள் குவிந்திருந்தால் அங்கு நுளம்புகளின் தொல்லையும் அதிகரித்துவிடும் அல்லவா?

பாட்டியும் அம்மாவும் புற்களைப் பிடுங்கி ஓரிடத்தில் குவித்துவிடுவர். அங்குள்ள மரங்களில் காய்ந்த ஓலைகள், இலைகளை வெட்டி அப்பா அந்த இடத்தில் போடுவார். பின்னர் அவற்றுக்கு தீ மூட்டி எரித்துவிடுவார்.

நீர் தேங்கியிருக்கக்கூடிய செடிகளில் நீர் நிரம்பியிருந்தால் அவற்றை வளைத்து நீரை அகற்றுவோம். ரம்பை போன்ற செடிகளில் இலைகளுக்கிடையே நீர் தங்குவதுண்டு. அப்போது அவற்றுக்கிடையே சிறிதளவு மண்ணைத் தூவி விடுவோம். சிலர் உப்புக் கட்டிகளைப் போட்டுவிடுவதும் உண்டு. அத்துடன், கூரையில் தங்கியிருக்கும் காய்ந்த இலைகளை அகற்றி கூரை பீலிகளையும் சுத்தம் செய்வோம். அவ்வாறு செய்வதனால் நுளம்புகள் நீரில் முட்டையிடுவது தடைப்படும்.

டெங்கு, சிக்குன்குன்யா, யானைக்கால், மலேரியா போன்ற நோய்களைப் பரப்புவது நுளம்புகளே ஆகும். எனவே, அவற்றின் பெருக்கத்தை தடுப்பதற்கு எமது சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பது அவசியமாகும்.

# குப்பைகளை முறையாக அகற்றுவோம்!

இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகளின் அளவு சுமார் 3 ஆயிரம் மெட்ரிக் தொன்களாகும். சரியான முறையில் வேறுபடுத் தப்படாமல் அகற்றப்படும் இந்த



குப்பைகளினால், சுற்றாடல் மற்றும் சமூக பிரச்சினைகள் பல ஏற்பட்டுள்ளன. எனவே, இந்த பிரச்சினைக்கான தீர்வுகள் வீடுகளில் இருந்தே எட்டப்பட வேண்டும்.

அந்தவகையில், வீடுகளில் சேரும் குப்பைகளை பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக், மக்கிப்போகும் பொருட்கள், கண்ணாடி, தகரப்பேணிகள் என்ற அடிப்படையில் வெவ்வேறாக வகைப்படுத்தி வெவ்வேறு பைகளில் அல்லது கூடைகளில் சேமித்து வைத்தால் குப்பைகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்ய முடியும். உதாரணமாக; மக்கிப்போகும் குப்பைகளினால் கொம்போஸ்ட் பசளையினை உருவாக்கிக்கொள்ள முடியும். ஆக, இதனை எமது தோட்டங்களுக்கு சிறந்த பசளையாக பயன்படுத்திக்கொள்ளலாம். அவ்வாறே, ஏனைய குப்பைகளையும் மீள் உற்பத்திக்காக நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். இவ்வாறு செய்வதன் மூலம் மேலதிக வருமானத்தினையும் ஈட்டிக்கொள்ள முடியும். மேலும் குப்பைகளினால் ஏற்படும் நோய்களையும் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும். அத்துடன், சுத்தமான சுற்றாடலை உருவாக்கிக்கொள்ளவும் இந்த வழிமுறை உதவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய் சென்றால் உண



**மற்றுமொரு கிரகத்தில் குடியிருப்புகளை அமைப்பதற்கு வழிவகைகளைக் கண்டுபிடித்துக்கொண்டிருக்கும் மனிதன் அங்கு எதிர்கொள்ள வேண்டிய சவால்களையும் அதற்கான தீர்வுகளையும் ஆராய்ந்துகொண்டிருக்கின்றான். அண்மையில் நாஸா நிறுவனத்தினால் இவ்வாறான ஒரு சிக்கலுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. செவ்வாயில் குடியிருப்புகளை அமைப்பது தொடர்பாக ஆராய்ந்துகொண்டிருக்கும் இவர்களுக்கு அங்கு குடியேறும் மனிதர்கள் எதனை உட்கொள்வார்கள் என்ற வினாவுக்கு விடை காண நேர்ந்தது. இதற்காக அவர்கள் கண்டுபிடித்துள்ள விடயம் மிகவும் வியப்பூட்டும் ஒன்றாகும். அதாவது, அதற்கான தீர்வு 'சைனோ பற்றீரியா' என்று அழைக்கப்படும் ஓர் நுண்ணங்கி என்பது குறிப்பிடத்தக்கது.**

## 'சைனோ பற்றீரியா' என்றால் என்ன?

இது ஒரு பற்றீரியா வகையாகும். இவை தமக்கான சக்தியினை சூரிய ஒளியின் மூலம் பெற்றுக்கொள்கின்றன. இதன் காரணமாகவே இதற்கு சைனோ பற்றீரியா என்று பெயர் சூட்டியுள்ளனர். இதனை நீலம் பச்சை கலந்த பாசி வகையாகவும் கருதுகின்றனர். இவற்றினை நன்னீரிலும், உவர்நீரிலும் காண முடியும்.


பண்டைய காலத்தில் உயிரற்ற கோளாக இருந்த பூமியினை உயிர்ப்புள்ள கிரகமாக மாற்றியது இந்த சைனோ பற்றீரியா இனமாகும். இந்த பற்றீரியா இனத்தினை செவ்வாயில் எமக்கு தேவையான காற்று, உணவு மற்றும் எரிபொருள் போன்ற பல்வேறு விடயங்களுக்கு பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

## மூலாதாரத்தினை உறிஞ்சிக்கொள்ளல்

செவ்வாயில் நைதரசன் மிகவும் குறைவான அளவிலேயே காணப்படுகின்றது. தாவரங்கள் செடி கொடிகளுக்கு பல விடயங்கள் அவசியமாகும். கியூரோசிட்டி ரோவரினால் பெறப்பட்ட தரவுகளின்படி செவ்வாய் பரப்பில் உள்ள மண்ணில் நைதரசன் இல்லை.

ஆய்வாளர்கள் குறிப்பிடுவதன்படி, இதற்கு ஒரு தீர்வு உண்டு. அதாவது, அந்த தீர்வு சைனோ பற்றீரியா ஆகும். இவற்றுக்கு நைதரசனை உருவாக்கும் ஆற்றல் உண்டு. இந்த நுண்ணங்கிக்கு காற்றிலிருந்து நைதரசனை இழுத்து அதனை அமோனியாவாக மாற்றும் விசேட ஆற்றல் உண்டு. இதனால், சைனோ பற்றீரியாவினை செவ்வாயின் பரப்பில் விசிறுவதே இந்த பிரச்சினைக்கு உள்ள ஒரே தீர்வாகும்.

நைதரசனைத் தவிர மனிதனுக்கு மற்றும் தாவரங்களுக்கு தேவையான மேலும் பல போஷணைப் பதார்த்தங்கள் உள்ளன. பொஸ்பரஸ், மெக்னீசியம், பொட்டாசியம், கல்சியம், நாகம், இரும்பு ஆகியவை உட்பட, பல போஷாக்குப் பதார்த்தங்கள் இதில் அடங்கும். பெரும்பாலும் இந்த பதார்த்தங்கள் அடங்கிய பாறைப் படிவுகளை செவ்வாயில் கண்டுபிடிக்க முடியும். இந்த பதார்த்தங்களை பாறைப் படிவுகளிலிருந்து உறிஞ்சிக்கொள்ளும் ஆற்றல் சைனோ பற்றீரியாவுக்கு உள்ளதாக ஆய்வாளர்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.





## எமது உணவு

பிரபஞ்சத்தில் நாம் எங்கிருந்தாலும் எம்மால் உணரப்படும் உடல் தேவைகளில் மாற்றமிராது. இதனால், எமக்கான உணவுகள் குறித்து நாம் அக்கறை கொள்ள வேண்டியுள்ளது. செவ்வாயில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாழப் போகும் மனிதன் பூமியிலிருந்து தனக்குத் தேவையான உணவுகளை வரவழைத்துக்கொள்வதில் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். அந்தவகையில், எடை, விமானங்கள், எரிபொருள் செலவினம் என்பன ஈடு செய்ய முடியாதளவுக்கு அதிகமாக இருக்கும். இதனால், செவ்வாயில் மனிதனுக்குத்

மட்டுமே. செவ்வாயில் சூரிய ஒளி 44 சதவீதம் மட்டுமே கிடைக்கின்றது. சைனோ பற்றீரியா தாவரங்களைவிட, அதிக வேகமாக சூரிய ஒளியினை உறிஞ்சிக்கொள்கின்றன என்று ஆய்வுகள் நிரூபித்துள்ளன. இதன்மூலம் பெருமளவான கலோரிகளைப் பெற முடியும்.

## புரதம் அதிகம்

சைனோ பற்றீரியாவினை உட்கொள்வது புதிய ஓர்

காணப்படுகின்றது. இதற்கு சிறந்த தீர்வு சைனோ பற்றீரியாவாகும். இந்த பற்றீரியாவினால் செவ்வாயில் ஒட்சிசனை உருவாக்க முடியும் என்று ஆய்வுகளில் உறுதியாகியுள்ளது.

## ரோவருக்கும் எரிபொருள்

செவ்வாயில் ஆய்வுகளை மேற்கொள்ளும் ரோவர் ஆய்வுக்கலத் திற்குத்

# ணும் உணவுகள்

தேவைப்படும் உணவினை மனிதனே பயிரிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

எனினும், இவை தாவரமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இதற்கு தேவை பச்சை நிறமான நுண்ணங்கிகள்

அனுபவமாக இருக்கும். இது தற்போது கிரகம் ஒன்றில் பிரபல்யமான உணவாகவும் மாற்று சக்தியாகவும் மாறியுள்ளது. இவை தற்போது உலகம் எங்கிலும் பயிரிடப்படுகின்றது. 'ஸ்பிருலினா' என்று அழைக்கப்படும் இவை நீலம் மற்றும் பச்சை நிறத்தில் சிறிய குடை போன்ற வடிவத்தினையும் மாத்திரையாகவும் கடைகளில் விற்பனைக்குள்ளன. இவை 'அத்ரோஸ்பிரா' வகையினைச் சேர்ந்தது. இவற்றில் புரதம் மிகவும் அதிகமாகும்.



ஸ்பிருலினா

## சுவாசிக்க தேவைப்படும் காற்று


செவ்வாயில் ஒட்சிசன் 0.13 வீதமாகவே

தேவையான எரிபொருளை இந்த சைனோ பற்றீரியா மூலம் வழங்க முடியும். இந்த சைனோ பற்றீரியா காற்றில் உள்ள நைதரசனை உறிஞ்சிக்கொள்வதுடன் நைதரசன் குறைந்தவுடன் காற்றில் உள்ள ஐதரசனையும் உறிஞ்சிக்கொள்கின்றது. ஐதரசனை உறிஞ்சிக்கொண்டு $H_2$ என்ற ரொக்கெட்டுக்கான எரிபொருளினை பெற்றுத்தரும் ஆற்றல் இந்த நுண்ணங்கிக்கு உள்ளது. இதனைத் தவிர சைனோ பற்றீரியாவினால் மேலும் ஓர் உயிர்ப்பன்மைத்துவ எரிபொருளினை உருவாக்க முடியும். அது எத்தனோல் என்பது குறிப்பிடத்தக்கது.

# நம் உடலைப் பற்றிய வியத்தகு உண்மைகள்!




- நமது உடல் எடையில் 14% எலும்புகளால் ஆனது.
- நமது உடலில் உறுதியான எலும்பு தொடை எலும்பு ஆகும். அது மிகவும் வலிமையானது.
- நமது உடல் எடையில் 7% இரத்தம் ஆகும்.
- தினந்தோறும் 450 கெலன் இரத்தம் சிறுநீரகத்தால் சுத்தப் படுத்தப்படுகின்றது.
- நமது உடலில் உள்ள இரத்த சிவப்பணுக்களின் ஆயுட்காலம் 120 நாட்கள், அதுபோல ஒவ்வொரு நொடியில் சுமார் இரண்டு மில்லியன் இரத்த சிவப்பணுக்கள் நமது உடலில் இறக்கின்றன.
- நமது கண்களின் எடை சராசரியாக 28 கிராம்.
- நமது கண்களுக்கு 500 விதமான ஒளிகளை பிரித்தறியும் சக்தியுண்டு.



- நமது கண்களில் உள்ள கருவிழி மட்டும்தான் இரத்தநாளம் இல்லாத உயிருள்ள திசு.
- பிறந்து முதல் 8 வாரம் வரை குழந்தைகளின் கண்களில் கண்ணீர் வராது.
- மனித இதயம் சராசரியாக ஒரு வருடத்திற்கு 35 மில்லியன் தடவைகள் துடிக்கிறது.
- இதயத்தில் உள்ள இரத்த அழுத்தமானது, இரத்தத்தை 30 அடிவரை பீய்ச்சி அடிக்கும் சக்தியைக் கொண்டது.
- ஒரு மனிதன் 35 வயதை அடைந்ததும் மூளையில் தினமும் 7,000 நரம்பு செல்கள் இறக்கின்றன.
- நாம் சுவாசிக்கும் மொத்த ஒட்சிசனில் 20% மூளைக்கு செல்கின்றது.
- நமது மூளை 80% நீரால் ஆனது.
- நமது மூளையின் செயற்றிறன் பகலைவிட இரவில் அதிகமாக இருக்கும்.
- நமது உடலில் வேகமாக வளரக்கூடிய திசு முடிதான்.
- மனித உடலில் உள்ள கல்லீரலானது 500 விதமான தொழிற்பாடுகளை புரிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-I)

பெயர்: ..........................................................


★ கீழ்காணும் வினாக்களுக்கு சரியான விடையை தெரிவுசெய்து அதன்கீழ் கீறிடுக.

01. பின்வரும் உருவில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை தெரிவுசெய்க.



1. 2. 3.

02. அருகிலுள்ள உரு சில செங்கற்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளதைக் காட்டுகின்றது எனின், உருவிலுள்ள செங்கற்களின் எண்ணிக்கை யாது?



1. 6 2. 4 3. 3


★ 03, 04 ஆம் வினாக்களில் குறைந்த தொடர்புள்ள உருச்சோடி உள்ள அடைப்பைத் தெரிக.

03.



1. 2. 3.

04.



1. 2. 3.

★ கீழ்காணும் கவிதையை வாசித்து 05 ஆம், 06 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரியது

05. இக்கவிதையில் கவிஞர் கூறும் முக்கிய கருத்து யாது?
1. தந்தை தாயைப் பேணுதல்
2. தொண்டு செய்தல் வேண்டும்
3. தருமம் செய்தல்

06. 'தருமம் ஒன்றே பெரியது' இதில் தருமம் என்பது;
1. உணவு வழங்குதல்
2. பராமரித்தல்
3. புண்ணியம் செய்தல்

07. ஒருவரைக் காட்டி மாலா கூறினாள், அவர் எனது கணவரின், மனைவியின், மகளின் சகோதரர் என்று. அப்படியாயின் மாலாவிற்கும் அவரிற்கும் இடையிலான உறவு யாது?

1. மகன் 2. கணவன் 3. மருமகன்

08. ஒரு கடையில் 36 மாம்பழங்கள் இருந்தன. அவற்றில் 2/6 பங்கு விற்கப்பட்டன எனின், எஞ்சியுள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

1. 6 2. 24 3. 18




09. பிழையான கோவையை தெரிவு செய்க
1. 9 x 9-9 = 72 2. 7 x 7+9= 58 3. 7 x 8+7=60

10. 24 மீற்றர் கயிறு ஒன்று இரு சம பகுதிகளாக வெட்டப்பட்டு, அவற்றுள் ஒரு பகுதி இரு சம பகுதிகளாக வெட்டப்பட்டது. அவற்றுள் ஒரு துண்டின் நீளம் எத்தனை சென்றிமீற்றர்?

1. 6cm 2. 12cm 3. 600cm

11. நோயாளி ஒருவருக்கு எப்போதும் இருப்பது எது?

1. தலையிடி 2. நோய் 3. காய்ச்சல்


12. ஒரு வயது நிரம்பிய குழந்தை கிருமிநாசினியை அருந்தி மரணித்தது. இதற்கான காரணமாக இருக்கக்கூடியது எது?
1. பாதுகாப்பற்ற முறையில் வீட்டில் நச்சுப் பதார்த்தங்களை வைத்தல்
2. நீர் என்று நினைத்து குடித்தல்
3. அம்மா அடித்ததால் குடித்தல்

13. பின்வருவனவற்றுள் இணைபிரியாது இருக்கும் இரு நண்பர்களை விளக்கும் உவமானம் எது?
1. கீரியும் பாம்பும் போல
2. நகமும் சதையும் போல
3. ஓடும் புளியம்பழமும் போல

14. V, X, XV, ....., ..... இந்த தொடரில் அடுத்து வரும் இரு எண்கள் எவை?

1. XX, XXV 2. XX, XXVI 3. XVI, XVII

15. இவ்வரைபின்படி, மாபிள்களின் மொத்த எண்ணிக்கை 80 ஆகும். அதன்படி மஞ்சள் மாபிள்களின் எண்ணிக்கை யாது?




1. 20 2. 25 3. 10

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி -II)

(நொவெம்பர் 11 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

*01) 1. ஆதிகால மனிதர்களைப் பற்றி 2. ஈட்டி, வில்லு*
*3. தேடிக்கொண்டனர்/ தொடங்கினர் 4. வில்+ஒன்றை*
*5. கொப்பு 6. கல்லுடன் கல்லை உரசி*

*02) 1. ஒழி 2. அரிய*

*03) 1. பிள்ளை 2. பெட்டை*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *04)* | *01. 1* | *04. 4* | *07. 2* | *10. 3* | *13. 1* |
| | *02. 2* | *05. 3* | *08. 2* | *11. 3* | *14. 1* |
| | *03. 1* | *06. 2* | *09. 3* | *12. 3* | *15. 2* |

*05) 01. 22 02. 3cm 03. இல்லை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அறிவிப்புப் பாணியில் தனித்துவம் பேணல்

தற்போது உள்ளது போல் ஆரம்ப காலங்களில் வானொலி நேயர்கள் தொலைபேசி வழியே வானொலியில் கலந்துரையாடும் முறைகள் இருக்கவில்லை. தபால் மூலமாகவே வானொலி நேயர்கள் வானொலி நிலையத்துடன் தொடர்புபட்டார்கள். நிகழ்ச்சிகளை பற்றிய அபிப்பிராயங்களையோ, விமர்சனங்களையோ தெரிவிப்பதற்கு தபால் முறையே அவர்களுக்கு கைகொடுத்தது. தமக்கு தேவையான பாடலையோ, நிகழ்ச்சிகளையோ கேட்பதற்கு கடிதமே இவர்களுக்கு உறுதுணையாக இருந்தது. அது மட்டுமன்றி, சில சந்தர்ப்பங்களில் நிகழ்ச்சிகளுக்கான பிரதியாக்கங்கள் கூட வானொலி நேயர்களால் அனுப்பப்பட்ட சந்தர்ப்பங்களும் இருந்தன. இது நேயர்கள் மத்தியில் எழுத்தாற்றலை மேம்படுத்துவதற்கும் வழி அமைத்தது எனலாம்.

ஒருவகையில் வானொலி நிலையத்தினர் தமது நிகழ்ச்சிகள் குறித்து நேயர்கள் எவ்வித அபிப்பிராயத்தை கொண்டுள்ளனர் என்பதை நாடி பிடித்துப் பார்ப்பதற்கு இந்த கடித உறவே பாலமாக அமைந்தது.

## அறிவிப்புப் பாணி

வானொலியில் அறிவிப்பு செய்வதில் அறிவிப்பாளர்கள் தமக்கே உரிய தனித்துவமான பாணிகளை கொண்டிருப்பர். குரல்வளம் ஒருவருக்கொருவர் மாறுபட்டிருப்பதில் மட்டுமன்றி நிகழ்ச்சிகளை தொகுக்கும் பாங்கு, உரையாடும் பாங்கு போன்றவற்றிலும் தனித்துவத்தைப் பேணுவர். இது தொழில்சார்ந்த ஆரோக்கியமான ஒரு போட்டியாக இருப்பதனால் ஒலிபரப்பின் தரத்திற்கு கைகொடுக்கும் ஒன்றாகவும் அமைந்திருக்கும். நிகழ்ச்சிகளை வழங்கும்போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிகழ்ச்சியில் தொய்வு நிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அறிவிப்பாளர் வசமே இருக்கும். எனவே, சுவாரஸ்யமாகவும் அதேவேளை, நேயர்களுக்கு சலிப்பேற்றாத வகையிலும் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதில் அறிவிப்பாளர் கருத்தாக இருப்பார்.





வானொலி அறிவிப்பாளர் எங்கோ ஒரு தொலைவிலிருந்து வானொலி ஒலிபரப்பை நடத்துகின்றபோதிலும் அதனை செவிமடுக்கின்ற ஒவ்வொரு வானொலி நேயருக்கும் அருகே இருந்து உரையாடுவதைப் போன்றதோர் உணர்வை ஏற்படுத்தும் விதமாகவே அறிவிப்பாளரின் அறிவிப்பு இருத்தல் வேண்டும். பத்திரிகையை எடுத்துக்கொண்டால் அதற்கென ஏனைய வேலைகளை நிறுத்திவிட்டுத்தான் பத்திரிகையை வாசிக்க ஒரு வாசகன் நேரத்தை ஒதுக்க வேண்டும். அதேபோல் தொலைக்காட்சியை பார்ப்பதென்றாலும் ஏனைய வேலைகளை நிறுத்திவிட்டுத்தான் தொலைக்காட்சியை பார்க்க வேண்டும். ஆனால், வானொலி அப்படியல்ல. வானொலியை ஒலிக்கச் செய்துவிட்டு செய்கின்ற வேலைகளை செய்தவாறே வானொலியை செவிமடுக்கக் கூடிய வசதி உள்ளது. எனவே, இதனை கருத்திற்கொண்டே அறிவிப்பாளர்களும் நிகழ்ச்சி தொகுப்பினை சுறுசுறுப்பாகவும் தொய்வில்லாமலும் வழங்குவதில் கூடிய ஆர்வத்தை செலுத்துவதுண்டு.



## நிகழ்ச்சி தயாரிப்பாளர்

அறிவிப்பாளர்கள் நிகழ்ச்சிகளில் அறிவிப்பு செய்கின்ற அதேவேளை, அதனை மேற்பார்வை செய்வதற்கென நிகழ்ச்சி தயாரிப்பாளர் அல்லது நிகழ்ச்சி கட்டுப்பாட்டாளர் ஒருவர் இருப்பார். இவர் அனைத்தையும் ஒருங்கிணைத்தவாறே மேற்பார்வை செய்து கொண்டிருப்பார். நிகழ்ச்சியை ஆரம்பித்தல், விளம்பர இடைவேளைகள், நிகழ்ச்சியை முடித்தல், நேரக்கட்டுப்பாடு என சகல அம்சங்களும் இந்த நிகழ்ச்சி தயாரிப்பாளரின் வழிநடத்தலின் கீழேயே நடைபெறும். இருப்பினும் நிகழ்ச்சிக்கு உயிரூட்டுபவராக அறிவிப்பாளரே இருப்பதனால், திரைக்கு முன், திரைக்கு பின் என்பது போல் வானொலி நேயர்களுக்கு அறிமுகமானவர்களாக இருப்பவர்கள் அறிவிப்பாளர்களே யாவர். இந்த அறிவிப்பாளர்களுக்கு பின்னே பாரிய ஒரு குழுவினரும் செயற்பட்டுத்தான் நிகழ்ச்சிகள் வழங்கப்படுகின்றன. இதில் தொழில்நுட்ப பிரிவினரின் பங்களிப்பும் முக்கியமாகும்.

(தொடரும்)

**-ரிஷபன்**


## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

* Practical English Learning Software DVD



* 4000 English Letter Writing Software



* 8 GB Pen Drive



பிரதி புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

* 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்.....

* ஆங்கில கற்கும் மென்பொருள் DVD
* 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்
* 8GB பென் டிரைவ்

போன்றன இலவசமாக வழங்கப்படும்

*04.11.2015 'தூவானம்' கேள்விக்கான விடை:*
அந்தனி ட்ரொலொப்
Pen Drive வெற்றியாளர்:
எம்.ஆசிக்,
228/1 A, மஹா ஹப்புகல,
கிந்தோட்டை, காலி.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
F Thoovaanam
என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்

அனுப்பவேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(18.11.2015)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

இவ்வார கூப்பன்:
18.11.2015
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..............................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா

தெற்காசியாவில் அமைந்துள்ள இந்தியா உலகின் மிகவும் பழமைவாய்ந்த நாகரிகங்களில் ஒன்றாகிய சிந்துவெளி நாகரிகத்தின் இருப்பிடமாக இருந்தமையால் இந்தியா என்ற பெயர் வரக் காரணமாக அமைந்தது. துணைக் கண்டமாகவும் கருதப்படும் இந்தியாவில் வாழ்ந்த ஆரியரும் திராவிடர்களும் இணைந்து இந்திய கலாசாரம் எனும் மாபெரும் கலாசாரத்தை உருவாக்கினர். இந்து, பௌத்தம், ஜைணம் உள்ளிட்ட பல்வேறு மதங்களின் ஊற்று இந்தியா ஆகும். குப்த அரசவம்சம் இந்திய வரலாற்றின் பொற்காலமாகும்.

பிற்காலத்தில் துருக்கியரதும் ஆப்கானிஸ்தானியர்களதும் ஆட்சி யின்கீழ் வந்த இந்தியாவில் 16 ஆம் நூற்றாண்டில் முகலாய சாம்ராஜ்யம் தோன்றியது. அதன் பின் பிரித்தானிய குடியேற்ற நாடாக மாறியது. அதிலிருந்தும் சுதந்திரமடைந்த இந்தியா 1950 களில் குடியரசாகியது.



இற்றைக்கு பத்தாயிரம் ஆண்டு களுக்கு முன்பு இந்தியாவில் பேலியோலி திக் வேடுவ கால மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன.

கி.மு. 2700 இல் சிந்துவெளி நாகரி கம் ஆரம்பமாகி விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட சமூக மொன்று இங்கு உருவாகியது.

இந்து, பௌத்தம், ஜைணம் மற்றும் சீக்கியம் ஆகிய வற்றின் தாயகம் இந்தியா வாகும்.

உலகின் முதலாவது பாடசா லையாக கருதப்ப டும் நாலந்தா இந்தியாவிலேயே அமைந்துள்ளது.

அசோகப் பேரரசனும் முகலாய பேரரசனும் இந்தியாவின் தனித்து வமான ஆட்சியாளர்கள்

## தேசிய மிருகம், பறவை, மலர்

தேசிய மிருகம் - வங்கப்புலி
தேசிய பறவை - மயில்
தேசிய மலர் - தாமரை

## இனங்கள்




## மொழிகள்

ஹிந்தி 41%, வங்காளி 8.1%, தெலுங்கு 7.2%, மராட்டி 7%, தமிழ் 5.9%, உருது 5%, குஜராத்தி 4.5%, கன்னடம் 4.7%, மலையாளம் 3.2%, ஒரியா 3.2%, பஞ்சாபி 2.8%, ஏனைய மொழி 8.4%

## சமயம்

இந்து 79.8%, இஸ்லாம் 14.2%, கிறிஸ்தவம் 2.3%, சீக்கியம் 1.7%, ஏனையவை 2%

## இயற்கை வளம்

நிலக்கரி, இரும்பு, மெங்கனீஸ், மைக்கா, பொக்சைட் டைடேனியம், க்ரோமைட், இயற்கை வாயு, சுண்ணக்கல்.


## அரசியல்

நாடாளுமன்றக் கட்டடம்

பிரதமர் நரேந்திர மோடி



கி.பி. 1858 முதல் 1947 வரை பெரிய பிரித்தானியா வின் குடியேற்ற நாடாக இருந்தது.




பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் இந்தியாவை ஆட்சி செய்தது.

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு.

இந்தியாவின் தேர்தல்முறை உலகின் பாரிய ஜனநாயக தேர்தல் முறையாகும்.

## பெரிய நகரம்

சுதந்திரத்தின் பின் பிரிந்த பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் காஷ்மீர் எல்லை தொடர்பாக பல தசாப்தங்களாக மோதல்கள் தொடர்கின்றன.

கிரிக்கட் அந்நாட்டில் புகழ்பெற்ற விளையாட்டாக திகழ்கின்றது.




நாணயம் - இந்திய ரூபாய்

பல்வேறு இசைப் பாரம்பரியங்களின் ஊற்று இந்தியாவே.

பாரம்பரிய உடை.



மீன்பிடிக் கைத்தொழில் பிரதான வருவாய்த்துறை.

புடவைகள், ஆடைக் கைத்தொழில் உள்ளிட்ட நெசவுக் கைத்தொழில் இந்தியாவின் மிகப் பெரிய வருமானத் துறையாகும்.

அந்நாட்டின் 'பொலிவூட்' உலகின் மிகப் பெரிய சினிமா கைத்தொழில் நிறுவனமாகும்.

நெல், தானியங் கள், காய்கறிகள், பழவகைகள் உள்ளிட்ட விவசாய நடவடிக்கைகள் நடைபெறு கின்றன.

இறைச்சி மற்றும் பாலுக்காக கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. மாடுகளை மிக உயர்வாக கருதுவதால் மாடு களை கொல்வ தில்லை.

உலகின் நான்காவது மிகப் பெரிய நிலக்கரிச் சுரங்கம் உள்ளது.

இறைச்சிக்காகவும் முட்டைக்காகவும் கோழிகள் வளர்க்கப்படு கின்றன.

வாகன உற்பத்தியும் வாகனங்களைப் பொருத்துதலும் இங்கு நடைபெறுகின்றது.

அழகிய வன உயிரினங்களும் அதிகம்.

தொலைக்காட்சி இங்கு பிரதான பொழுதுபோக்குச் சாதனமாகும்.

விண்வெளி ஆய்வுகளில் முன்னணி வகிக்கின்றது.

அணுசக்தி கொண்ட நாடு.

சுற்றுலா பயணிகளை கவரும் புராதன கட்டடங்கள் மற்றும் ஸ்தலங்கள் பல அமைந்துள்ளன.

இந்துமத பக்தர்கள் கங்கை நதிக்கரையில் வருடந்தோறும் பூஜைகளை நடத்துவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒல்லாந்தரின் இலங்கை வருகை

இலங்கைக்கு முதன்முதலாக வந்த ஐரோப்பிய நாட்டவர்களாக போர்த்துக்கேயரைக் குறிப்பிடலாம். போர்த்துக்கேயரின் ஆட்சியை முறியடிக்கும் நோக்கில், இலங்கை மன்னர்கள் ஒல்லாந்தரின் உதவியை நாடினர். ஒல்லாந்தர்கள் இந்நாட்டில் இருந்து போர்த்துக்கேயரை விரட்டியதன் நோக்கம், இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியை நிறுவுவதற்கே ஆகும். அதன்படி, இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சி முடிவுற்ற கையோடு, ஒல்லாந்தரின் ஆட்சிக்காலம் ஆரம்பமானது.





## ஒல்லாந்தர்கள் என்போர்...

வடமேல் ஐரோப்பாவில் அமைந்துள்ள ஒரு நாடுதான் 'ஒல்லாந்து' (இன்று நெதர்லாந்து) ஆகும். இந்நாட்டு மக்களை ஒல்லாந்தர்கள் அல்லது டச்சுக்காரர்கள் அல்லது நெதர்லாந்து மக்கள் என பல்வேறு பெயர்களில் அழைப்பர். 17 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஒரு வல்லரசாக ஒல்லாந்து திகழ்ந்தது. அக்காலத்தில் ஒல்லாந்தர்கள் கீழைத்தேய நாடுகளிலும் இந்து சமுத்திர கரையோரப் பிரதேசங்களிலும் முக்கியமான வர்த்தக மையங்களையும் படைத்தலைமையகங்களையும் நிறுவியிருந்தனர்.

**கி.பி.1600:** ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கம் நிறுவப்பட்டது. கீழைத்தேய வர்த்தக ஆதிக்கத்தை தம்வசப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

**கி.பி. 1602:** இவ்வருடம் மே மாதம் 31 ஆம் திகதி ஜோரிஸ்ஃபன் ஸ்பில்பர்ஜன் எனும் ஒல்லாந்த அட்மிரல், மட்டக்களப்புக்கு வருகை தந்தார். அவர்தான் இலங்கைக்கு வருகை தந்த முதலாவது ஒல்லாந்தராக கருதப்படுகிறார். ஜூன் 15 ஆம் திகதி முதலாம் விமலதர்மசூரிய மன்னனை அவர் சந்தித்தார். அப்போது போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து துரத்த மன்னன் ஜோரிஸ்ஃபன்னிடம் உதவி கேட்டான். ஆனால், ஒல்லாந்த வர்த்தக பிரதிநிதியாக இருந்த அவருக்கு மன்னனுக்கு உதவி வழங்கும் அளவிற்கு அதிகாரம் இருக்கவில்லை.



**கி.பி. 1612:** மார்ச் மாதம் 08 ஆம் திகதி மார்ஷெலுஸ் த பொஸ்கோவர் எனும் ஒல்லாந்த தூதுவர் இலங்கை வந்தார். ஒல்லாந்தருக்கு கொட்டியாரத்தில் கோட்டை ஒன்றைக் கட்டுவதற்கும் போர்த்துக்கேயருடன் யுத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கும் இணங்கிய மார்ஷெலுஸ் த பொஸ்கோவர், செனரத் மன்னனுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டார். அக்காலகட்டத்தில் ஐரோப்பாவில் போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே சமாதானம் நிலவியது. அதனால், போர்த்துக்கேயருக்கு எதிராக செயல்பட ஒல்லாந்தர்களால் முடியாமல் போனது. எனினும், ஏதேனுமொரு காரணத்தால் போர்த்துக்கேயர்கள் சமாதானத்தை முறித்துக் கொண்டால், அவர்களுக்கு

எதிராக நடவடி...
உதவுவதாக செ...
மன்ன...ம் ெ...
உறுதி அளித்தா...
அறிந்த போர்த்து...
ஒல்லாந்தரின் ெ...
கோட்டையை ...

**கி.பி. 1638:** ...
திகதி போர்த்துக்...
னர் கன்னொறு...
ராச்சியத்தை ஆ...
சித்தனர். மன்ன...
ராஜசிங்கன் அத...
மாக முறியடித்த...
10 ஆம் திகதி அ...
வெஸ்டர்வோல்...
ஒல்லாந்த தளப...
யில் கடற்படை...
களப்பிற்கு வந்...
வோல்ட்டுக்கும்...
இரண்டாம் ராஜ...
இடையில் ஒப்ப...
மேற்கொள்ளப்...
ஆண்டு போர்த்...
வசமிருந்த மட்ட...
திருகோணமலை...
கோட்டைகளை...
தம்வசப்படுத்தி...


கி.பி. 1766 இ...
ருக்கும் இடை...
உள்ளடக்கி இ...
இல்லாத பல ...
படுத்திக்கொ...
பூராகவும் பர...
மாக மட்டுப்ப...
களுடன் தொ...
பல விடயங்க...
இணக்கம் ெ...

## 1638 ஒப்பந்தம்

அரசனிடம் இருந்து ஒல்லாந்தருக்கு கிடைக்கும் வர்த்தக மற்றும் அடிப்படை உதவிகள் பற்றியும், போர்த்துக்கேயரை இந்நாட்டில் இருந்து துரத்த ஒல்லாந்தரிடம் இருந்து அரசனுக்குக் கிடைக்கும் போர் உதவிகள் பற்றியும் இந்த ஒப்பந்தத்தில் அடங்கியிருந்தன. மேலும், இந்த ஒப்பந்தத்தின்படி, இந்நாட்டின் சகல வர்த்தகப் பொருட்களின் (யானைகள் தவிர) ஏகபோக உரிமை ஒல்லாந்தருக்கு கிடைத்தது. எனினும், போர்த்துக்கேய மொழியில் இருந்த அந்த ஒப்பந்தத்தை ஒல்லாந்த மொழியில் மொழிபெயர்க்கும்பொழுது, அதில் "ஒல்லாந்தர் கைப்பற்றும் கோட்டைகளில் மன்னர் விரும்பினால் மாத்திரமே ஒல்லாந்தர் சேனைகளை நிறுத்த முடியும்" என்ற வசனத்தில் 'மன்னர் விரும்பினால் மாத்திரமே' என்ற சொற்கள் நீக்கப்பட்டிருந்தன. இந்த தந்திரோபாயத்தின்படி, தாம் போர்த்துக்கேயரிடம் இருந்து விடுவித்த சகல கோட்டைகளினதும் உரிமையை ஒல்லாந்தர் தம்வசமாக்கிக்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 1766 ஒப்பந்தம்

**கி.பி. 1766 இல் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் இருபத்தைந்து பிரிவுகளை உள்ளடக்கி இருந்தது. ஒல்லாந்தர்கள் இதற்கு முன் தம்வசம் இல்லாத பல பிரதேசங்களை இந்த ஒப்பந்தத்தின்மூலம் தம்வசப் படுத்திக்கொண்டனர். அதனால், ஒல்லாந்தரின் அதிகாரம் நாடு பூராகவும் பரவியது. மலையக ராச்சியம் நாட்டின் உள்ளக ராச்சியமாக மட்டுப்படுத்தப்பட்டது. அத்துடன், வேறு வெளிநாட்டவர்களுடன் தொடர்புகளை பேணுவதில்லை என்பது உட்பட, மேலும் பல விடயங்கள் குறித்தும் ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் இணக்கம் வெளியிட்டிருந்தனர்.**

எதிராக நடவடிக்கை எடுக்க உதவுவதாக செனரத் மன்ன...ம் பொஸ்கோவர் உறுதி அளித்தார். அதனை அறிந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தரின் கொட்டியாரக் கோட்டையை அழித்தனர்.

**கி.பி. 1638:** மார்ச் 28 ஆம் திகதி போர்த்துக்கேய படையினர் கன்னொறுவையில் கண்டி ராச்சியத்தை ஆக்கிரமிக்க முயற்சித்தனர். மன்னன் இரண்டாம் ராஜசிங்கன் அதனை வெற்றிகரமாக முறியடித்தான். மே மாதம் 10 ஆம் திகதி அடம் வெஸ்டர்வோல்ட் எனும் ஒல்லாந்த தளபதியின் தலைமையில் கடற்படையொன்று மட்டக்களப்பிற்கு வந்தது. வெஸ்டர்வோல்ட்டுக்கும் மன்னன் இரண்டாம் ராஜசிங்கனுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதே ஆண்டு போர்த்துக்கேயர் வசமிருந்த மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய கோட்டைகளை ஒல்லாந்தர்கள் தம்வசப்படுத்தினர்.

**கி.பி. 1640:** பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி நீர்கொழும்பு கோட்டையையும், மார்ச் மாதம் 13 ஆம் திகதி காலி கோட்டையையும் போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தர் கைப்பற்றினர். அதன்பின் சில நாட்களில் மாத்தறை கோட்டையையும் ஒல்லாந்தர் கைப்பற்றினர். இந்த



கோட்டைகளைக் கைப்பற்றியதை அடுத்து வில்லியம் ஜாக்கொப் கொஸ்தார் என்பவர் ஆள்பதியாக நியமிக்கப்பட்டதோடு, இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஒல்லாந்தர்கள் தமது ஆட்சியை நிறுவிக்கொண்டனர்.

**கி.பி. 1652:** அங்கருவாதொட்ட மற்றும் களுத்துறையில் அமைந்திருந்த போர்த்துக்கேய கோட்டைகளையும் ஒல்லாந்தர்கள் கைப்பற்றினர்.


**கி.பி.1656:** கொழும்புக் கோட்டையை ஒல்லாந்தர்கள் கைப்பற்றினர்.

**கி.பி. 1658:** இந்த வருடத்தின் பெப்ரவரி மாதத்தில் மன்னார் கோட்டையையும், ஜூன் மாதத்தில் யாழ்ப்பாணக் கோட்டையையும் ஒல்லாந்தர்கள் கைப்பற்றினர். இதனையடுத்து இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சி முற்றாக மறைந்தது.

**கி.பி. 1766:** பொருளாதார மற்றும் அரசியல் காரணங்களால் ஏற்பட்ட பல்வேறு முரண்பாடுகளால் ஒல்லாந்தருக்கும் மலையக ராச்சியத்தினருக்கும் இடையில் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. ஒல்லாந்தர்கள் பல தடவைகள் மலையக ராச்சியத்தை ஆக்கிரமிக்க முயற்சித்தனர். எனினும், கண்டி மன்னர்கள் அந்த ஆக்கிரமிப்புகளை வெற்றிகரமாக முறியடித்தனர். ஆக்கிரமிப்புகளின்மூலம் கண்டி ராச்சியத்தை அடிபணிய வைக்க முடியாது என்பதை புரிந்துகொண்ட வில்லியம் ஃபெப்லெக் எனும் ஒல்லாந்த ஆள்பதி, ஓர் ஒப்பந்தத்தின் மூலம் மலையக ராச்சியத்தின் அதிகாரத்தைக் குறைப்பதற்கு முயற்சித்தார்.

**கி.பி. 1796:** இக்காலத்தில் பிரித்தானியரின் கவனம் இலங்கையின் மீது திரும்பியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### ஒல்லாந்தர் ஆட்சியின் பலாபலன்கள் சில...

* ரோமானிய-டச்சு சட்டம் அறிமுகம் செய்யப்பட்டமை மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டமை.
* தேசவழமை என்ற தமிழ் சட்டத்தொகுப்பு உருவாக்கப்பட்டமை.
* உடல் வரி, மீனவர் வரி, தேங்காய் வரி, கள்-சாராய வரி, நெசவு வரி, காணி வரி என பல வரிமுறைகள் அறிமுகம்.
* புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதம் அறிமுகம்.
* தீர்வை வரி முறை அறிமுகம்.
* அரச பணி பயிர்ச்செய்கை நடவடிக்கை, வரி அறவிடல் போன்றவை தொடர்பான 'தோம்பு' எனும் ஆவண முறை உருவாக்கப்பட்டமை.
* கறுவா பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டமை.
* காலி, மாத்தறை, களுத்துறை, நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், மன்னார் ஆகிய வீதிகள் அபிவிருத்தி செய்தமை.
* கி.பி. 1793 இல் முதன்முதலாக கொழும்பில் அச்சகம் ஒன்றை நிறுவியமை.
* பாடசாலை ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பொருட்டு 'நோமல்' எனும் பாடசாலையை கொழும்பில் நிறுவியமை.
* உயர்கல்வி நடவடிக்கைகளுக்காக, கொழும்பில் 'செமனரி' எனும் பெயரில் கல்விக் கூடமொன்று ஆரம்பிக்கப்பட்டமை.
* முத்துக்குளித்தல் தொழிலை அறிமுகம் செய்தமை.
* மிளகு பயிர்ச்செய்கையை மேற்கொண்டமை.
* கடலோர வண்டல் மண் பிரதேசங்களில் மரவள்ளிப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டமை.
* ஏலம், கோப்பி, கரும்பு என்பன பயிரிட்டமை.
* ஆடைகளுக்கு சாயமிடும் கைத்தொழிலை அபிவிருத்திசெய்தமை.
* கொழும்பு மற்றும் அதற்கண்மைய பிரதேசங்களில் உள்ள வயல்களை களனி கங்கை பெருக்கெடுப்பிலிருந்து பாதுகாக்க அணை கட்டியமை.
* முத்துராஜவலயில் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்தமை.
* மொறட்டுவையில் மரத்தளபாடக் கைத்தொழிலை ஆரம்பிக்க முன்னோடிகளாகத் திகழ்ந்தமை.
* டச்சுக் கட்டடக் கலையை அறிமுகம் செய்தமை.

இதனையடுத்து பிரித்தானியருக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் சிறு சிறு மோதல்கள் ஏற்பட்டு, பிரித்தானியர் இலங்கையில் ஒல்லாந்தரின் ஆட்சிப் பிரதேசங்களை கைப்பற்றினர். கி.பி.1796 இல் நிகழ்ந்த அச்சம்பவத்தோடு, இந்நாட்டில் ஒல்லாந்தர் ஆட்சி முடிவுக்கு வந்தது.

### ஒல்லாந்துக் கோட்டைகள் அமைந்துள்ள இடங்கள்

* மட்டக்களப்பு
* திருகோணமலை
* காலி
* மாத்தறை
* கொழும்பு
* கொட்டியாரம்
* சிலாபம்
* புத்தளம்

-இரஞ்சித் ஜெயகர்


ஃபினீஷிய வணிகர்கள்


ஃபினீஷிய கப்பல்


ஃபினீஷிய நாணயக்குற்றி

# வணிக நடவடிக்கைகளில் புகழ்பெற்ற ஃபினீஷியர்கள்

*பண்டைய காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பற்றிய தகவல்களை அறிதல் என்பது மாய உலகத்தில் சஞ்சரிப்பதற்கு ஒப்பானதாகும். அந்த வரிசையில் அடங்கும் ஒரு மக்கள் கூட்டத்தினர்தான் 'ஃபினீஷியர்கள்' ஆவர்.*

## யார் இந்த ஃபினீஷியர்கள்?

மத்தியதரைக் கடலின் கரையோரப்பகுதியில் அமைந்துள்ள சிறிய நகரில் கூட்டமாக வாழ்ந்துள்ள இவர்கள், மிகவும் திறமை வாய்ந்த கடற்படையினர் ஆவர். அத்துடன், வணிகத்திலும் இவர்கள் திறமை பெற்றவர்கள். அடிக்கடி கடல் பிரயாணங்களில் ஈடுபட்ட இவர்களையே 'ஃபினீஷியர்கள்' என்று அழைத்தனர்.

ஃபினீஷியர்களின் நகரங்கள் ஒன்றுக்கொன்று கடலுடன் தொடர்புபட்டிருந்தன. ஊதா நிறச் சாயம், கண்ணாடி மற்றும் யானைத் தந்தங்கள் என்று பல்வேறுபட்ட பொருட்களை இவர்கள் விற்பனை செய்து வந்தனர். கி.மு. 1200 முதல் 350 வரையான காலப்பகுதியில் மத்தியதரைக் கடல் பகுதியெங்கும் வணிக செயற்பாடுகளை இவர்களே தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

ஆபிரிக்காவின் வடக்கு கரையோரப் பகுதியான கார்தேஜ் இவர்களின் பிரசித்தி பெற்ற வணிக நிலையமாகக் காணப்பட்டது. ஃபினீஷியர்களின் வரலாற்றுக் குறிப்புகளின்படி, வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளினால் ஃபினீஷியா பலமுறை பாதிக்கப்பட்டது. பெபிலோனியர்கள், அசிரியன்கள், பாரசீகர்கள் போன்றோர் ஃபினீஷியாவினை ஆக்கிரமிப்பு செய்தனர். ஆனால், இவர்களின் வணிக நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்பட்டதில்லை. கி.மு. 332 இல் மகா அலெக்சாண்டர் பேரரசன் ஃபினீஷியாவினை ஆக்கிரமிப்பு செய்தான். அதன் பின்பு கிரேக்கர்கள் அங்கு வசிக்க ஆரம்பித்தனர். இதனையடுத்து கிரேக்கர்களின் கலாசாரம் அங்கு பரவத் தொடங்கியதோடு, ஃபினீஷிய கலாசாரம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது.




## பெயர் வந்த விதம்

கிரேக்கர்கள் இவர்களை 'ஊதா மனிதர்கள்' என்றே அழைத்தனர். கிரேக்க மொழியில் 'ஃபினீக்ஸ்' என்ற சொல்லில் இருந்தே இந்த பெயர் வந்துள்ளதாக கருதப்படுகின்றது. ஃபினீஷியர்கள் தயாரித்த பல நிறச் சாயம் மற்றும் பிரபல்யம் பெற்ற ஊதா நிறச் சாயம் என்பன காரணமாகவே அவர்கள் 'ஊதா மனிதர்கள்' என அழைக்கப்பட்டுள்ளனர்.

## ஃபினீஷியா

இன்று லெபனான் நாடு உள்ள பகுதியிலேயே பண்டைய கால ஃபினீஷியா இருந்துள்ளது. அது கிழக்கு மத்தியதரைக் கடல் பகுதியாகும். அதற்கமைய, மத்தியதரைக் கடல் பகுதி முழுவதும் ஃபினீஷியர்களே பரவி வாழ்ந்துள்ளனர்.

## ஃபினீஷிய கப்பல்கள்

மத்தியதரைக் கடல் பிராந்தியத்தில் ஃபினீஷியர்களின் கப்பல்கள் மிகவும் பிரசித்திபெற்றுத் திகழ்ந்துள்ளன. இவர்கள் வணிகர்களாக பிரசித்தி பெறுவதற்கு இந்த கப்பல்களே பெரிதும் உதவியுள்ளன.

## கண்ணாடிப் பொருட்கள்

ஃபினீஷியர்கள் கண்ணாடியைக் கண்டுபிடிப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே, பண்டைய கால எகிப்தியர்கள் கண்ணாடியைக் கண்டுபிடித்திருந்தனர். ஆனால், ஃபினீஷியர்கள் தயாரித்த கண்ணாடிகள் மிகவும் தெளிவாகவும் வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும் காணப்பட்டன.

## பிப்லோஸ்

'பிப்லோஸ்' என்பது ஃபினீஷிய துறைமுகமாகும். பெப்பிரஸ் தாள் விற்பனையில் மிகவும் பிரபல்யம் பெற்ற இடமாக இது விளங்கியது. கிரேக்கர்கள் பெப்பிரஸ் இலைகளை 'பிப்லோஸ்'என்றே அழைத்தனர். பிப்லோஸ் துறைமுகம் காரணமாகவே பெப்பிரஸ் தாள்களும் பிப்லோஸ் என்ற பெயரில் அழைக்கப்பட்டன.

## நிறப் பயன்பாடு

மியூரெக்ஸ் என்ற ஒருவகை நத்தை ஓடுகளிலிருந்து ஊதா நிறச் சாயத்தை உருவாக்கும் விதம் பற்றி ஃபினீஷியர்கள் மட்டுமே அறிந்திருந்தனர். இது விலை அதிகமான சாயமாகும். ரோமானியப் பேரரசில் அதியுயர் பதவிகளை வகித்தவர்களுக்கு மட்டுமே இந்த சாயமிட்டுத் தயாரிக்கப்பட்ட ஆடைகளை அணிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்திருந்தது.


ஃபினீஷியர்கள் தயாரித்த மட்பாண்டப் பொருளொன்று

## வணிகத்தில் பெயர் பெற்றவர்கள்

வணிக நடவடிக்கைகளுக்காக புதிய இடங்களுக்கு செல்லும்போது, தாம் கொண்டு வந்த பொருட்களை கரையோரத்தில் தொங்கவிட்டுக் காட்சிப்படுத்தும் வழக்கத்தினை ஃபினீஷியர்கள் கொண்டிருந்தனர். இதனால், இந்த பொருட்களை ஏனையவர்கள் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்துள்ளது. இவர்கள் கூம்பு வடிவ தொப்பிகளை அணியும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர். உலோகங்கள், பண்ணை விலங்குகள், தானியங்கள், ஆடைகள், ஆபரணங்கள் மற்றும் வைரங்கள் என்பன இவர்களின் மிகவும் பிரபல்யம் பெற்ற வணிகப் பொருட்களாகும்.

-பிரியா


இவ்வகை நத்தை ஓடுகளிலிருந்தே ஊதா நிறச் சாயம் பெறப்பட்டுள்ளது


பெப்பிரஸ் தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

## அ/ஹோறாபொல முஸ்லிம் வித்தியாலயம் - கெகிராவ



**பெயர்:** எஃப்.ஸம்ரா.
**புள்ளிகள்:** 176.



**பெயர்:** பி.சம்ஹா.
**புள்ளிகள்:** 168.



**பெயர்:** எம்.சப்ராஜ்.
**புள்ளிகள்:** 165.



**பெயர்:** என்.பஸால் முஹம்மட்.
**புள்ளிகள்:** 165.



**பெயர்:** பி.மனால்.
**புள்ளிகள்:** 163.



**பெயர்:** ஐ. இப்பத் ஜஹான்.
**புள்ளிகள்:** 159.



**பெயர்:** ஐ. அப்துல்லாஹ்.
**புள்ளிகள்:** 153.



**பெயர்:** எம்.மிப்லாஹ்.
**புள்ளிகள்:** 153.



**பெயர்:** எம்.அஸ்லம்.
**புள்ளிகள்:** 157.
**பாடசாலை:** அர்-ரஹ்மத் ஆரம்ப பாடசாலை, கலேவெல.



**பெயர்:** ஃஎப். ஃபரா.
**புள்ளிகள்:** 138.
**பாடசாலை:** கொ/கைரியா மு.பெ.கல்லூரி.



**பெயர்:** றிஸாட் மொஹமட்.
**புள்ளிகள்:** 163.
**பாடசாலை:** அல்-கஸ்ஸாலி ஆரம்ப வித்தியாலயம், அடுலுகம.



**பெயர்:** நுஹா நஸ்ரின்.
**புள்ளிகள்:** 157.
**பாடசாலை:** அ/கெகிராவ முஸ்லிம் ம.வித்தியாலயம்.


உங்கள் அபிமான

தமிழ் Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs. 10/=

தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது

wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் பயில்வோம்




## ආයුබෝවන் ஆயுபோவன் வணக்கம்

இன்றைய பாடத்தில் மாலாவுக்கும் கீதாவுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

මාලා: **ආයුබෝවන්! මම මාලා. ඔයා..?**
ஆயுபோவன்! மம மாலா. ஒயா...?
மாலா: **வணக்கம்! நான் மாலா. நீங்கள்...?**

ගීතා: **මම ගීතා.**
மம கீதா.
கீதா: **நான் கீதா.**

මාලා: **ඔයාලා මෙහෙට එන්න ඉස්සර කොහේද හිටියේ?**
ஒயாலா மெஹெட்ட என்ன இஸ்ஸர கொஹேத ஹிட்டியே?
மாலா: **நீங்கள் இங்கே வரமுன்னர் எங்கே இருந்தீர்கள்?**

ගීතා: **අපි හිටියේ ගාල්ලේ.**
அப்பி ஹிட்டியே கால்லே.
கீதா: **நாம் காலியில் இருந்தோம்.**

මාලා: **එතකොට මෙහේ ආවේ..?**
எதகொட்ட மெஹே ஆவே...?
மாலா: **அப்படியென்றால் இங்கு வந்தது...?**

ගීතා: **අපේ තාත්තාට මෙහේ ලංකා බැංකුවට මාරුවීමක් ලැබුණා.**
அப்பே தாத்தாட்ட மெஹே லங்கா பெங்குவட்ட மாருவீமக் லெபுணா.
கீதா: **எங்கள் அப்பாவுக்கு இங்குள்ள இலங்கை வங்கிக்கு இடமாற்றம் கிடைத்தது.**

මාලා: **ඔයා මෙහෙ මොන පාසලට ද යන්න ඉන්නේ?**
ஒயா மெஹெ மொன பாசலட்ட த யன்ன இன்னே?
மாலா: **நீங்கள் இங்கே எந்தப் பாடசாலைக்குப் போக இருக்கிறீர்கள்?**

ගීතා: **මෙහේ උසස් බාලිකා විදුහලට.**
மெஹே உசஸ் பாலிகா விதுஹலட்ட.
கீதா: **இங்கே மகளிர் உயர்தர கல்லூரிக்கு.**

මාලා: **ඇත්තද? මමත් ඒ පාසලේ.**
எத்தத? மமத் ஏ பாசலே.
மாலா: **அப்படியா? நானும் அந்தப் பாடசாலையில்தான்.**

ගීතා: **ඔයා කීවෙනි පන්තියෙද?**
ஒயா கீவெனி பந்தியேத?
கீதா: **நீங்கள் எத்தனையாம் வகுப்பில்?**

මාලා: **මම 8 ශ්‍රේණියේ. ඔයා?**
மம 8 ஷ்ரேணியே. ஒயா?
மாலா: **நான் 8 ஆம் தரத்தில். நீங்கள்?**

ගීතා: **මම 7 ශ්‍රේණියේ.**
மம 7 ஷ்ரேணியே.
கீதா: **நான் 7 ஆம் தரத்தில்.**

මාලා: **කොච්චර හොඳද? අපි දෙන්නටම එකට පාසල් යන්න පුළුවන්.**
கொச்சர ஹொந்தத? அப்பி தென்னட்டம எகட்ட பாசல் யன்ன புலுவன்.
மாலா: **எவ்வளவு நல்லது? நாம் இருவரும் ஒன்றாக பாடசாலைக்குப் போகலாம்.**

ගීතා: **ඔව්.. ඔව්. අන්න අපේ අම්මා කතා කරනවා. මම යනවා.**
ஒவ்... ஒவ். அன்ன அப்பே அம்மா கதா கறனவா. மம யனவா.
கீதா: **ஆமாம்... அதோ, எங்கள் அம்மா கூப்பிடுகிறார். நான் போகிறேன்.**

මාලා: **හොඳයි නංගි.**
ஹொந்தய் நங்கி.
மாலா: **நல்லது தங்கச்சி.**



### பயிற்சி

இடைவெளிகளை நிரப்புக.

1. අපි හිටියේ ............
2. ............ පන්තියෙද?
3. අම්මා ............ කරනවා.




## கலப்பு வாக்கியம்
## Complex Sentence

**If** எனும் இணைக்கும் சொல்லைக் (Joining word) கையாண்டு ஒன்றிணைக்கப்பட்டுள்ள கலப்பு வாக்கியங்களை மேலும் இங்கே பயில்வோம்.

அ) If I have time, I will help you.
எனக்கு நேரம் கிடைக்குமாயின், நான் உனக்கு உதவி செய்வேன்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

* If I have time,
எனக்கு நேரம் கிடைக்குமாயின்,
(துணை வாக்கியப் பகுதி-Subordinate Clause)

* I will help you.
நான் உனக்கு உதவி செய்வேன்.
(பிரதம வாக்கியப் பகுதி-Chief Clause)

ஆ) If you leave now, you can catch the train.
நீ இப்போது புறப்படுவாயெனில், உன்னால் ரயிலைப் பிடிக்க முடியும்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

* If you leave now,
நீ இப்பொழுது புறப்படுவாயெனில்,
(துணை வாக்கியப் பகுதி-Subordinate Clause)

* You can catch the train.
உன்னால் ரயிலைப் பிடிக்க முடியும்.
(பிரதம வாக்கியப் பகுதி-Chief Clause)

இ) If Sumathi gets the permission, she can attend the seminar.
சுமதி அனுமதியைப் பெறுவாளாயின், அவளால் கருத்தரங்கிற்கு சமூகமளிக்க முடியும்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

* If Sumathi gets the permission,
சுமதி அனுமதியைப் பெறுவாளாயின்,
(துணை வாக்கியப் பகுதி-Subordinate Clause)

* She can attend the seminar.
அவளால் கருத்தரங்கிற்கு சமூகமளிக்க முடியும்.
(பிரதம வாக்கியப் பகுதி-Chief Clause)

ஈ) If you go to the library, you can read many books.
நீ நூலகத்துக்குச் செல்வாயெனில், பல நூல்களை வாசிக்கலாம்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

* If you go to the library,
நீ நூலகத்துக்குச் செல்வாயெனில்,
(துணை வாக்கியப் பகுதி-Subordinate Clause)

* You can read many books.
உன்னால் பல நூல்களை வாசிக்கலாம்.
(பிரதம வாக்கியப் பகுதி-Chief Clause)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரஷ்யாவிற்கு எதிராக ஒலிம்பிக் தடை வருமா...?



ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு ரஷ்யாவிற்கு தடை விதிக்கப்படலாம் என்றவோர் கருத்து அண்மைய நாட்களாக பரவி வருகின்றது. ஒலிம்பிக் தடகள போட்டிகளின்போது, ரஷ்ய விளையாட்டு வீரர்கள் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்துகளை பயன்படுத்தியே போட்டிகளில் ஈடுபடுவதாகவும் இதற்கு ரஷ்ய அரசாங்கம் உடந்தையாக இருந்து வருவதாகவும் உலக தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து பாவனைக்கு எதிரான அமைப்பு தெரிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து பயன்படுத்தப்பட்டதா? என்பது குறித்து மேற்படி நிறுவனம் விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. இந்த விசாரணை அறிக்கை சில தினங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டது.

இந்த அறிக்கையிலேயே ரஷ்ய வீரர்கள் தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்தினை அந்நாட்டு அரசாங்கத்தின் அனுசரணையிலேயே பயன்படுத்தியிருப்பதாகவும், எனவே, ரஷ்யாவிற்கு ஒலிம்பிக் தடை விதிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ரஷ்ய வீர, வீராங்கனைகள் 5 பேருக்கும், ரஷ்ய மெய்வல்லுனர் பயிற்றுனர்கள் 5 பேருக்கும் ஆயுள்கால தடை விதிக்கப்படவேண்டும் என்றும் இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்த குற்றச்சாட்டுத் தொடர்பாக, ஒருவார காலத்திற்குள் உரிய விளக்கத்தை வழங்குவதற்கு உலக மெய்வல்லுனர் சங்கம் ரஷ்ய மெய்வல்லுனர் சங்கத்திற்கு அவகாசம் வழங்கியுள்ளது. இதேவேளை, மேற்படி குற்றச்சாட்டு தொடர்பான ஆதாரங்களை தமக்கு வழங்குமாறு ரஷ்யா கேட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# பாடசாலைகளுக்கென 9,000 விளையாட்டுத்துறை ஆசிரியர்கள்...

## புதிதாக நியமனம் வழங்கப்படவுள்ளன



பாடசாலைகளில் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்காக 9,000 விளையாட்டுப் பயிற்றுனர்கள் புதிதாக நியமனம் செய்யப்படவிருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார். இது குறித்து மேலும் தெரிவித்துள்ள அவர் "9,000 பாடசாலைகளில் விளையாட்டுத்துறைக்கென தகுதி வாய்ந்த பயிற்றுனர்கள் ஒருவரும் கிடையாது.



இதனால், சகல அரசாங்க பாடசாலைகளிலும் விளையாட்டுத்துறை கல்விக்கென பயிற்றுனர் ஆசிரியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# டேவிட் வோனரின் சென்ட்ச்சரி சாதனை...!

டெஸ்ட் போட்டியில் இரண்டு இன்னிங்ஸிலும் 'சென்ட்சரி' களை பெற்ற



80 ஆவது டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் என்ற சாதனையை அவுஸ்திரேலியாவின் துடுப்பாட்ட வீரரான டேவிட் வோர்னர் நிகழ்த்தியுள்ளார். அவுஸ்திரேலியா–நியூஸிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்ற டெஸ்ட் போட்டியிலேயே இச்சாதனையை அவர் நிகழ்த்தினார். அது மட்டுமன்றி, இவ்வாறு இரண்டு இன்னிங்ஸ்களிலும் 'சென்ட்ச்சரிகளை' மூன்று தடவைகள் பெற்று சாதனை படைத்த உலகின் மூன்றாவது வீரர் என்ற பெருமையையும் வோர்னர் பெற்றுள்ளார்.

இவருக்கு முன்னதாக அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொன்டிங், இந்தியாவின் கவஸ்கார் ஆகியோர் இந்த சாதனையை நிகழ்த்தியவர்களாவர்.

இலங்கையின் சங்கக்கார, அரவிந்த டி சில்வா, அவுஸ்திரேலியாவின் மெத்யூ ஹேடன், கிரேக் செப்பல், தென்னாபிரிக்காவின் ஜெக் கலிஸ், இந்தியாவின் டிராவிட், மே.இ. தீவுகள் கிளைவ் வொல்கட் ஆகியோர் இச் சாதனையை இரண்டு தடவைகள் நிகழ்த்தியோருக்கான பட்டியலில் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அடுத்த ஒலிம்பிக்குடன் பலர் ஓய்வுபெறுவர்



அடுத்த வருடம் பிரேஸில் நாட்டின் ரியோடி ஜெனிரோ நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளின் பின்னர் உலக மெய்வல்லுனர் போட்டியாளர்கள் பலர் ஓய்வுபெறுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக தெரிய வருகின்றது. இவர்களுள் உலகப் புகழ் ஓட்ட வீரரான ஜெமேய்க்கா நாட்டின் உசேன் போல்ட்டும் அடங்குவார் என்றும் கூறப்படுகின்றது.

2008 ஆம் ஆண்டு சீன ஒலிம்பிக் போட்டியில் முதலாவது தடவையாக கலந்துகொண்ட உசேன் போல்ட் அதனையடுத்து லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக்கிலும் கலந்துகொண்டுள்ளார். இதுவரை 5 உலகக் கிண்ணப் போட்டிகளில் போல்ட் கலந்து கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




உசேன் போல்ட் மட்டுமன்றி, அமெரிக்காவின் டைசன் கிரே, எலிஸன் ஃபொக்ஸ், பிரிட்டனின் ஜெஸிக்கா எனிஸ், ஜெமெய்க்காவின் அபொஃபா பவெல் ஆகியோரும் இந்த ஓய்வுபெறும் போட்டியாளர்களின் பட்டியலில் அடங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீச்சுவாலையை பாராதீனப்படுத்துவோம்!

யாழ்ப்பாணம்
தேசிய ஜம்போரி
இன்னும் 15 வாரங்கள்....



சிறந்த வெளி சாரணர் முகாமில் பயன்படும் பாராதீனப்படுத்தக்கூடிய தீச்சுவாலையினை தயார்படுத்திக்கொள்ள வழிமுறைகள் சில உள்ளன. தீச்சுவாலையில் இருந்து வெளிவரும் ஒளியினை உங்களுக்கு தேவையான இடத்தினை நோக்கி பாராதீனப்படுத்துவதே இதன் நோக்கமாகும். இங்கு காட்டப்பட்டுள்ள படங்களை அவதானியுங்கள்.

தீச்சுவாலையின் ஒளி மற்றும் வெப்பம் பாராதீனப்படுத்தப்பட வேண்டிய இடத்திற்கு எதிர்ப்புறமாக பாராதீனப்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. பாராதீனப்படுத்தலுக்காக பெரிய கற்கள், குறுக்காக வைக்கப்பட்டுள்ள விறகுகள் மற்றும் குறுக்காக வைக்கப்பட்டுள்ள விறகுத் துண்டுகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

கவனிக்க: பாராதீனப்படுத்தியினை நிர்மாணிக்கும் போது, பிரதான தீச்சுவாலைக்கு அருகாமையில் நிர்மாணிப்பதனை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

## விஜய் சாரணர் உலகம்

# சாரணர் தொடர்பாடல்

தொடர்பாடல் இன்றைய உலகில் அத்தியாவசியமான விடயமாக மாறியுள்ளது. கருத்துக்கள், தகவல்கள், எண்ணங்கள் பரிமாற்றம் ஆகிய ஆற்றல் மக்கள் தொடர்பாடலுக்கு



உண்டு. இதில் வானொலி மிகவும் முக்கியமான மக்கள் தொடர்பாடல் சாதனமாகும். வானொலி அலைவரிசைகள் மூலம் உலகில் வாழும் சாரணர்கள் தமது கருத்துக்களைப் பகிர்ந்துகொள்கின்றனர். உலகின் புதிய வானொலிக் கலைஞர்களினது பங்களிப்பும், ஒவ்வொரு நாட்டிலும் இயங்கும் வானொலி அலைவரிசைகளை ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினது பங்களிப்பும் இங்கு கிடைக்கின்றது. ஒவ்வொரு ஆண்டினதும் ஒக்டோபர் மாதத்தில் மூன்றாவது வாரம் இந்நிகழ்வு நடைபெறுகின்றது.

சர்வதேச சாரணர் தலைமையகம் தமது வருடாந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பிரதான இடத்தினை இதற்கு வழங்கி வருகின்றது. ஜொட்டா ஜொட்டி என்ற இந்த தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டமானது, கணினி, இணையம், செய்மதி தகவல் பரிமாற்றம் வரை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், இலங்கை சாரணர்களுக்கு இந்த வாய்ப்பு இன்னும் கிட்டவில்லை என்பது




கவலைக்குரியதே.

### தடைகளை வெற்றிகொண்ட சர்வதேச சாரணர்கள்

இத்தகைய 2015ஆம் ஆண்டுக்கான சர்வதேச வானொலி மற்றும் இணைய ஜம்போரி அண்மையில்



நடைபெற்றது. மிகவும் வினைத்திறனான முறையில் தயாரிக்கப்பட்ட வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் இணைய நிகழ்ச்சிகள் பலதரப்பட்ட செயற்பாடுகளினூடாக இயக்கப்படும் விதம் இங்குள்ள புகைப்படத்தினை அவதானிக்கும்போது உங்களுக்குத் தெரியும். உலகின் பல்வேறு இடங்களில் இருந்துகொண்டு சாரணர்கள், சாரணியர்கள் அவர்களின் கருத்துக்களை, எண்ணங்களை பரிமாற்றிக்கொண்ட விதம் புதிய அனுபவமாகவே அமையும் எனலாம்.

# அமெரிக்க சாரணர் பிராந்தியம்



எட்டாவது அமெரிக்க சாரணர் மாநாடு அண்மையில் நடைபெற்றது. கென்குன்னில் நடைபெற்ற மாநாட்டில் உலகின் 117 நாடுகளைச் சேர்ந்த சாரணர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.


# சர்வதேச சாரணர் சங்கத்தின் 41 ஆவது உலக மாநாட்டிற்கான கைச்சாத்திடல்




41 ஆவது சர்வதேச சாரணர் மாநாடு 2017 ஆம் ஆண்டு அசர்பைஜானில் நடைபெறவுள்ளது. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை அண்மையில் கைச்சாத்திடப்பட்டதுடன், இந்நிகழ்வில் சர்வதேச சாரணர் குழுவின் தலைவர் ஜொஆ அமன்டோ மற்றும் சர்வதேச சாரணர் சங்கத்தின் பணிப்பாளர் நாயகம் ஸ்கொட் டியர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சேர்த்து எழுதுக





= C _ _ b _ _




= C _ _ b _ _ _ _





= S _ _ _ f _ _ _




= A _ _ c _ _ _ _


## படத்திரவுகளை அவதானித்து கட்டங்களைப் பூர்த்தி செய்க









## கூட்டுத்தொகை காண்க




## வழி காட்டுங்கள்



## அறிவுக்கு விருந்து (04.11.2015) விடைகள்



சதுரங்கள் - 11




முக்கோணிகள் - 44




மாதம், மா, மான், மாவடு, மாடு, மாலை, அம்மா, அவன், அலை, தமாம், தவம், தடு, தலை, காடு, காலை, வடு, வலை.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.163




**மேலிருந்து கீழ்**

1. உண்மை பேசுபவன்.
2. எல்லாம்.
3. 'முடிவற்றது' என்றும் அர்த்தப்படும்.
5. நீர்.
7. 'வரிசை' என்றும் கூறலாம்.

**இடமிருந்து வலம்**

1. தகராறு.
4. நிலையான வடிவமற்ற, வழிந்தோடும் தன்மை கொண்டவற்றை இவ்வாறு அழைப்பர்.
5. நாம் வாழும் கோள்.
6. ஐம்பொறிகளில் ஒன்று.
7. சூரியன்.
8. மரத்திற்கு மரம் தாவும் இயல்புடைய சிறு பிராணி.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.162 விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கு | வே | ளி | | 2 பா | ஷை |
| ரு | | | 3 மை | ல் | |
| | 4 பு | 5 தி | னா | | 6 அ |
| 7 ந | ய | ம் | | ரை | 8 க |
| 9 க | ம் | பு | | 10 தா | ரா |
| ம் | | | ல் | 11 ம | தி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



வாழைச்சேனை இரத்தினம் வீதியைச் சேர்ந்த நிமலன்-நலினா தம்பதியரின் செல்வப் புதல்வன் அக்ஷயன், தனது பதின்மூன்றாவது பிறந்தநாளை 10.11.2015 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் அனைவரும் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.


# காலநிலை அளவீடுகள்



எமது பூமியில் காலநிலைகள் பல்வேறுபட்ட பருவ காலங்களில் மாற்றமடைகின்றன. அந்தவகையில், வளிமண்டல வெப்பநிலை, ஈரப்பதன், காற்று மற்றும் மழைவீழ்ச்சி என்பன மாற்றமடைகின்றன. இவற்றை அதற்குரிய உபகரணங்கள் மூலமும் அளவீடு செய்கிறார்கள்.

அந்தவகையில், வளிமண்டல வெப்பநிலையானது, வெப்பமானிமூலம் அளவீடு செய்யப்படுகின்றது. மழைவீழ்ச்சியானது, 24 மணி நேரத்தில் பெறப்பட்ட மழை வீழ்ச்சியின்மூலம் கணிப்பீடு செய்யப்படுகிறது. இது மழைமானி மூலம் அளவீடு செய்யப்படுகிறது. இவ்வாறே, காற்றின் திசையை அறிவதற்கு காற்று திசைகாட்டியும் காற்றின் வேகத்தை அறிவதற்கு வேகமானியும் பயன்படுகின்றது.

வளிமண்டல ஈரப்பதன் ஆனது ஈரமானிமூலம் அளக்கப்படுகிறது. இந்த வளிமண்டல ஈரப்பதன் நாளுக்கு நாள் நேரத்திற்கு நேரம் மாற்றமடைகின்றது. கோபோல்ட் (II) குளோரைட் எனும் கடதாசி மூலமும் ஈரப்பதன் அளக்கப்படுகிறது. இக்கடதாசி வளிமண்டல ஈரப்பதனை உள்ஈர்ப்பதால் நிறமாற்றம் அடைகின்றது. இந்த மாற்றத்தின்மூலம் வளிமண்டல ஈரப்பதன் தொடர்பான மாற்றங்கள் அவதானிக்கப்படுகின்றன.



# ஒளி முதல்கள் என்றால் என்ன...?



ஒளியை தோற்றுவிக்கும் பொருட்கள் 'ஒளி முதல்கள்' எனப்படுகின்றன. இதில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று- இயற்கை ஒளி முதல்கள்; மற்றையது- செயற்கை ஒளி முதல்கள்.

இயற்கை ஒளி முதல்கள் என்பது இயற்கையாகவே ஒளியை வெளிவிடுவனவாகும். இவற்றில் சூரியன், நட்சத்திரம், மின்மினிப் பூச்சிகள் மற்றும் ஒளிரும் ஒருவகைக் காளான்கள் என்பன அடங்கும். இவ்வாறே, செயற்கை ஒளி முதல்கள் என்பன செயற்கையா்க ஒளிரும் பொருட்கள் எனலாம். இவற்றில் மின்குமிழ், டோச்லைட், எரிபொருள் விளக்குகள் என்பன அடங்குகின்றன.

இந்த ஒளி அலைகள் வளிமண்டலத்தில் இலகுவாக ஊடுருவுகின்றன. நீரில் ஓர் அளவே ஊடுருவிச் செல்கின்றன. எனினும், தளவாடியில் ஒளி தெறிப்படைகின்றது. இது ஒளித் தெறிப்பு எனப்படுகின்றது.

# கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



சி.ரம்ஜித்தா, வவுனியா இ.மகளிர் வித்., வவுனியா.



க.லோகிதாஸ், விக்னேஸ்வரா வித்., திருகோணமலை



எஸ்.பாத்திமா அஸ்னா, பொ.மு.ம.கல்., பொலன்னறுவை.



எச்.அமீனா, அஜ்மீர் தேசிய பாட., மாத்தளை.



எஸ்.சரிகா, வெளிமடை த.ம.வித்., வெளிமடை.



செ.லக்வின், தலவாக்கலை த.வித்., தலவாக்கலை.



சு.சசிகரன், ராமநாதபுரம் ம.வித்.,



நிதுர்சன், விபுலானந்தா வித்., மூதூர்.



கெ.அகாஸ், பொகவான கில்லானி த.வித்., பொகவந்தலாவ.


## 'விழா உலா' குறித்து உங்கள் கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதியில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் உட்பட ஏனைய சாதனையாளர்கள், விழாக்கள் பற்றிய தகவல்கள் கட்டணமின்றியே பிரசுரிக்கப்படுகின்றன.

பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்பும்போது அதுகுறித்த, படம் மற்றும் தகவலை பிறந்தநாள் கொண்டாடப்படவுள்ள தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறும் சாதனையாளர்களின் படம் மற்றும் அதுகுறித்த தகவலை அனுப்பும்போது கட்டாயமாக குறித்த சாதனைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழின் நிழற் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியம் வரைவோம்




# அலிபாபாவும் 40 திருடர்களும் 27

கதை, ஓவியம்: வேணு வாரியத்




# தெரிந்து கொள்வோம்

* இலங்கையின் பரப்பளவில் மிகப் பெரிய, சிறிய மாவட்டங்கள் எவை?

  பெரிய மாவட்டம் - அநுராதபுரம்
  சிறிய மாவட்டம் - கொழும்பு




* சார்க் நாடுகளில் கூடிய தலா வருமானத்தைப் பெறும் முதல் இரு நாடுகள் எவை?

  i. மாலைதீவு ii. இலங்கை

* மனித உடலில் மிகவும் பெரிய உறுப்பு எது?

  தோல்

* காணாமல் போனோரை கண்டறிய அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் யார்?

  மெக்ஸ் வெல் பரணகம






* சர்வதேச அணுசக்தி நிலையம் எங்கே அமைந்துள்ளது?

  ஹங்கேரியின் வியன்னா நகரில்

* இலங்கையின் முதலாவது பெண் பிரதம மந்திரி யார்? எந்த ஆண்டில் தெரிவுசெய்யப்பட்டார்?

  சிரிமாவோ ஆர்.டி பண்டாரநாயக்க.
  1960 இல் தெரிவு செய்யப்பட்டார்





* ஐரோப்பிய யூனியன் நாடுகளின் மத்திய வங்கி எங்கே அமைந்துள்ளது?

  பிரசல்ஸ் நகரில்


* 2011 ஆம் ஆண்டில் உலக சனத்தொகை 700 கோடியாகும். இன்னும் 20 வருடங்களில் உலக சனத்தொகை எவ்வளவாக அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது?

  200 கோடியால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது



தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிய பற்றீரியா கண்டுபிடிக்கப்பட்ட இடம்

# மரணம் அற்ற வாழ்க்கைக்கு முயற்சிக்கும் ரஷ்ய விஞ்ஞானி

மரணம் அடையாமல் அமரத்துவம் பெற தன்னால் இயலும் என்று அண்மையில் ஒரு விஞ்ஞானி செய்த பிரகடனம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. உலகில் பெரும் சர்ச்சையினை ஏற்படுத்திய இந்த விஞ்ஞானி ரஷ்ய நாட்டவராவார். இவர் பெயர் எனட்டோலி புருஷ்கோவ். இவரை, சக விஞ்ஞானிகள் பைத்தியம் என்று அழைக்கின்றனர். சைபீரியாவின் பாறைப்படிவுகள் மத்தியில் பனியில் உறைந்து பாதுகாப்பாக இருந்த 3.5 மில்லியன் ஆண்டுகள் பழமைவாய்ந்த பற்றீரியாவினை உடலுக்குள் செலுத்திக்கொண்ட பின்னரேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## பேராசிரியர்

மொஸ்கோ நகர அரச பல்கலைக்கழகத்தின் பூகோளவியல் பிரிவின் பிரதான பேராசிரியராக அன்ட்டோலி புருஷ்கோவ் பணியாற்றுகின்றார். பழமையான பற்றீரியாவை உடலுக்குள் செலுத்திக்கொண்ட பின்னர் தனது உடல் பலம் பெற்றுள்ளதாகவும், கடந்த இரண்டு ஆண்டுகளாக தனக்கு தடிமன் கூட பிடிக்கவில்லை என்றும் அவர் கூறுகின்றார்.

## பழமை வாய்ந்த பற்றீரியா

இந்த பற்றீரியாவை 'பெசிலஸ் எஃப்' என்று அழைக்கின்றனர். பனிப்பாறைகள் மத்தியில் உறைந்திருந்து பல மில்லியன் ஆண்டுகள் இந்த பற்றீரியா பாதுகாப்பாக இருந்து வந்துள்ளதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அந்த பற்றீரியா இருந்த பகுதியினுள் மண் மற்றும் நீர் மாதிரிகளை ஆய்வு செய்யும் போதே இந்த பற்றீரியாவை இனங்கண்டு நீர் மாதிரியினூடாக பற்றீரியாவை பிரித்தறிந்துள்ளனர்.


எலிகளைப் பயன்படுத்தி மேற்கொண்ட பரிசோதனை


'பெசிலஸ் எஃப்' பற்றீரியா


குருதிக்கலங்களில் கலக்கப்பட்ட போது

## பெசிலஸ் எஃப்

முதலில் இந்த பற்றீரியா தாவரக் கலங்களுக்குள் உட்செலுத்தப்பட்டபோது, அதன் விளைவு வியப்பினை ஏற்படுத்துவதாக இருந்தது. அதாவது, அந்த தாவரக் கலம் மிகவும் வேகமாக வளர்ச்சி யுற்றதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அதன் பின்னர் எலிகளின் உடல்களுக்குள்ளும், மனித குருதிக் கலங்களுக்குள்ளும் இந்த பற்றீரியா உட்செலுத்தப்பட்டது. அதில் எந்தவொரு பக்கவிளைவுகளும் ஏற்படவில்லை. இந்த பற்றீரியாவினால் எலிகளின் உடலுக்குள் புதிய சக்தி அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. அது மட்டுமன்றி, வயது முதிர்ந்த எலிகளால் இனப்பெருக்கம் செய்யவும் முடிந்துள்ளது. இதன்படி, இந்த பற்றீரியாவினை மனித உடலுக்குள் செலுத்தி பரிசோதனை செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டபோதே முன் குறிப்பிட்ட அனட்டோலி என்ற விஞ்ஞானி அதற்கு சுய விருப்புடன் முன்வந்தார்.

## அனட்டோலியின் கருத்து

"பற்றீரியாவினை செலுத்திக் கொண்ட பின்னர் எனக்கு களைப்பு குறைவாக இருந்தது. தொடர்ச்சியாக நீண்ட நேரம் பணியாற்ற முடிகின்றது" என்று அவர் கூறியுள்ளார். "பற்றீரியாவினால் [illegible] பாதிப்புகள் பற்றி எனக்கு தெரியாது. நான் வருடத்திற்கு ஒரு தடவை முழுமையான உடற் பரிசோதனை செய்து உடல் ஆரோக்கிய நிலைமையை அறிந்துகொள்வேன். இதுவரை எனக்கு எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை" என்று அன்ட்டோலி மேலும் குறிப்பிடுகின்றார்.

## 2009 ஆம் ஆண்டில்

'இந்த பெசிலஸ் எஃப்' பற்றீரியா 2009 ஆம் ஆண்டில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. அனட்டோலி தலைமையிலான குழுவினரே இதனைக் கண்டுபிடித்தனர். சக்கா என்ற பகுதியில் மெம்மத் மலைப் பகுதி என்று அழைக்கப்படும் பகுதியின் பனிப் பாறைப் படிவுகளிலேயே இந்த பற்றீரியா கண்டுபிடிக்கப்பட்டது. பண்டைய காலத்தில் வாழ்ந்த மெம்மத் இராட்சத யானைகளின் பாதுகாப்பான படிம எச்ச எலும்புகள் இந்த பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வாறு படிம எச்சங்களாகியுள்ள மெம்மத்களின் மூளையிலிருந்தே இந்த பற்றீரியா பெறப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

## யக்குட் வாசிகள்

'யக்குட்' என்று அழைக்கப்படும் பழங்குடி மக்கள் இந்த பற்றீரியா கண்டுபிடிக்கப்பட்ட யக்குட் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வரலாற்றுடன் தொடர்புடையவர்கள். இவர்கள் இன்னும் நவீன உலகுடன் தொடர்புறாமல் இருக்கின்றனர். இவர்கள் எப்போதுமே நோய்வாய்ப்படாதவர்கள். இந்த 'பெசிலஸ்' எஃப் பற்றீரியா யக்குட் பிராந்தியத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ளன. நீர் மூலாதாரங்களுடனும் அவை கலந்துள்ளன. எனவே, இவை யக்குட் வாசிகளின் உடலிலும் கலந்திருக்கக்கூடும். இதுவே அவர்களது ஆரோக்கியத்தின் ரகசியமாக இருக்கக்கூடும், என்று சேர்பிய விஞ்ஞானி விளாடிமிர் ரெப்பின் கூறுகின்றார்.

## அமரத்துவம் வாய்ந்த தடுப்பூசி

"மனித உடலை ஆரோக்கியமாகவும், பலம் கொண்டதாகவும் மாற்ற இந்த பற்றீரியா உதவுமாயின் இதனை ஒரு தடுப்பூசியாக உருவாக்கி மனிதர்கள் எதிர்கொள்ளும் நோய்கள் மற்றும் பாதிப்புகளுக்கான மருந்தாகப் பயன்படுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நகர நிர்மாணதினம்

இன்றைய உலகம் மிக வேகமாக நகரமயமாகி வருகின்றது. அதன்படி மனிதர்களின் கூட்டு வாழ்க்கையானது கூட்டுத்தொகுதியாக பல சிக்கலான நிலையை அடைந்துள்ளது. இதனால், ஏற்படும் பல பிரச்சினைகளை தீர்த்து மக்களுக்கும் சூழலுக்கும் மிகவும் நல்லதோர் நகரத்தை திட்டமிட்டு நிர்மாணிப்பதற்காக 1949 ஆம் ஆண்டு முதல் 'உலக நகர திட்டமிடல் நிர்மாணத் தினம்' கடைப்பிடிக்கப்படுகின்றது.

திட்டமிட்ட நல்லதோர் நகரத்தை உருவாக்குவதற்கு தேவையான தகவல்களையும் ஆலோசனைகளையும் கலந்துரையாடும் தினமாக இத்தினம் அமைகின்றது.




1949 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் நொவெம்பர் மாதம் 08 ஆம் திகதி உலக நகரத் திட்டமிடல் தினமாகும். இது உலக நகரமயமாக்கல் தினம் (World Urban ISM Day) என்றும் அழைக்கப்படுகின்றது.

## பேராசிரியர் கார்லோஸ் மாரியா



ஆர்ஜன்டீனாவைச் சேர்ந்த பேராசிரியர் கார்லோஸ் மாரியா டெல்லா பாஓலேரா என்பவரே உலக நகரத்திட்டமிடல் நிர்மாணத் தினத்தை உருவாக்கியவராவார்.



**WORLD TOWN PLANNING DAY**
**4-6 NOVEMBER 2015**
**HOUSING REGENERATION** STRENGTHENING COMMUNITIES
planningtheworld.net @WTPDonlineConf #WTPD2015

### இல்ல மறுவாழ்வு சமூகத்தை பலப்படுத்தல்

## 2015 ஆம் ஆண்டின் தொனிப்பொருள்

ஒவ்வொரு வருடமும் நொவெம்பர் 8 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் உலக நகர திட்டமிடல், நிர்மாணத் தினத்தையொட்டி இம்முறை நொவெம்பர் 4-6 வரை சர்வதேச வலைப்பின்னல் ஊடாக, கருத்தரங்கு நடத்தப்பட்டது. வீட்டு மறுவாழ்வுச் சமூகத்தைப் பலப்படுத்தல் என்பதே அதன் தொனிப்பொருளாகும்.



## 04 கண்டங்களில் 30 நாடுகள் நகரத் திட்டமிடல் நிர்மாணத் தினத்தை அனுஷ்டிக்கின்றன

## நிகழ்ச்சி நிரலின் வரலாறு

நகரத் திட்டமிடல் நிர்மாணிப்பில் மக்களையும் இத்துறைசார் தொழிலில் ஈடுபடுபவர்களையும் அதிக ஈடுபாடு கொள்ளச் செய்வதே இந்த நிகழ்ச்சி நிரலின் நோக்கமாகும். அதன்போது இந்த தொழில்சார் திட்டமிடல் நிர்மாணிப்பாளர்கள் அனைவருக்குமே தமது தொழிலில் ஈடுபடும்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## உலக நகரத் திட்டமிடல் நிர்மாண தினத்தைக் கொண்டாடுவதன் பிரதான நோக்கம்

1. உலகெங்கும் நகரங்கள் மற்றும் வலயங்கள் தோறும் நகரத் திட்டமிடல் நிர்மாணம் குறித்து மக்களின் கவனத்தை ஈர்த்தல்.
2. தரமான மனிதக் குடியிருப்புகள் மற்றும் அதற்கான சூழலை அமைப்பதில் மக்களின் பங்களிப்பை பெறல்.
3. சாதாரண பொதுமக்கள் மத்தியில் இது குறித்து புதிய கருத்தாக்கங்களை ஏற்படுத்த பிரசாரங்களை மேற்கொள்ளல்.




19 ஆம் நூற்றாண்டில் உலகெங்கும் தமது குடியேற்ற நாடுகளில் நகரங்களை திட்டமிட்டு நிர்மாணித்தனர்.

## இலங்கையின் நகரத் திட்டமிடல் நிர்மாணம்

புராதன இலங்கையில் மிகவும் திட்டமிட்டு நிர்மாணிக்கப்பட்ட நகரமாக அநுராதபுர யுகத்தில் பண்டுகாபய மன்னனால் கட்டப்பட்ட அநுராதபுர நகரம் கருதப்படுகின்றது. சமய மற்றும் கலாசார சகஜீவன வாழ்க்கையிலும் உட்கட்டமைப்பிலும் மிக உயர்ந்த நிலையில் அது கட்டி எழுப்பப்பட்டது.



## நகர நிர்மாணத்தின் வரலாறு

மனிதன் நாகரிகம் அடைந்ததோடு, நகர நிர்மாணங்களும் ஆரம்பமாகின. கால ஓட்டத்தில் வல்லமை படைத்தோர் தமது நகரங்களை முறையாக அமைத்துக்கொண்டனர். உரோமாபுரி மக்களிடம் நகர நிர்மாணிப்பிற்கு தேவையான சகல அம்சங்களும் இருந்தன. நீர் விநியோகமும் முறையாக நடைபெற்றது.





19 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதி வரை உலகில் நிலவிய கைத்தொழில் புரட்சியானது, நகரத் திட்டமிடல் மற்றும் நிர்மாணிப்பில் இருந்த அக்கறையை அதிகப்படுத்தியது.



சிரியாவின் எலெப்போவில் உள்ள புராதன நகரமே உலகின் மிகப் பழமையான நகரமாகும்.



பொதுநலவாய நாடுகளில் இதற்கு அதிக முன்னுரிமை கொடுக்கப் பட்டது.





ஐ.நா. சபையின் ஊடாக இந்த நகரத் திட்டமிடல் நிர்மாணம் உலகெங்கும் பரவியது.

## கொழும்பு மாநகர எண்ணக்கரு



கொழும்பு மாநகரத்தை மாற்றியமைக்கும் நோக்கோடு மாநகரம் அல்லது மெகாபொலிக் நகர எண்ணக்கருவை இப்பொழுது முன்வைத்துள்ளனர். நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட கட்டடங்களையும் போக்குவரத்து வசதிகளையும் முறையாக அமைக்க திட்டமிடுவதே இதன் எதிர்பார்ப்பாகும்.




நிரந்தரமாக நகரங்களை திட்டமிட்டு நிர்மாணிப்பது குறித்து அதிக கவனம் செலுத்தப்படுகின்றது.






(-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நம் உடலின் ராஜாக்கள்

நம் உடலின் ராஜாக்கள் யார் தெரியுமா? அவைதான் இதயம், மண்ணீரல், நுரையீரல், சிறுநீரகம், கல்லீரல் என்பனவாகும். மரபுவழி மருத்துவ அறிவியலின்படி, இந்த ராஜா உறுப்புகள் சரியாக இருந்தால்தான், நம் உடலின் பிற உறுப்புகள் சரியாக இருக்கும். அதாவது, இந்த ஐந்து உறுப்புகளும்தான் முழு உடலையும் பாதுகாப்பவையாகும். நம் உடலில் எந்த நோய் ஏற்பட்டாலும், இந்த உறுப்புகளுக்குத் தெரியாமல் ஏற்படாதாம்...!



அப்படியென்றால் இந்த உறுப்புகளுக்குள் மூளை அடங்காதா? என்று நீங்கள் கேட்கலாம். உண்மையில் மரபுவழி மருத்துவங்கள் மூளையைப் புறக்கணிக்கின்றன. நவீன மருத்துவத்தில்கூட இது முடிவற்ற சர்ச்சையாகவே இருக்கின்றது. நம் உடலின் எல்லா உறுப்புகளோடும் தொடர்பில் இருந்து, அவற்றை இணைத்துப் பணியாற்றுவது மூளையாக இருந்தாலும், இந்த ஐந்து ராஜ உறுப்புகளும்தான் மூளை இயங்குவதற்கான அடிப்படைக் காரணமாக இருக்கின்றன என மரபுவழி மருத்துவர்கள் கூறுகின்றனர்.

# இவை... மிகப் பெரியவை...!




## மிகப் பெரிய பயணிகள் விமானம்

உலகிலேயே மிகவும் பெரிய பயணிகள் விமானமாக 'Airbus A380' கருதப்படுகின்றது. ஐரோப்பிய விமானக் கட்டுமான துறையில் பெயர் பெற்ற ஐரோப்பிய எயார்பஸ் நிறுவனமே இதனை தயாரித்துள்ளது. இந்த விமானத்தில் பயணிகள் வகுப்புக் கட்டமைப்புக்கு ஏற்ப 544-853 பேர் வரை பயணிக்கலாம்.

## மிகப் பெரிய பயணிகள் கப்பல்கள்





'Oasis class' ரக Allure of the seas மற்றும் Ms Oasis of the seas ஆகிய கப்பல்களே உலகின் மிகப் பெரிய பயணிகள் கப்பல்கள் ஆகும். இந்த ரக கப்பலொன்றில் ஒரே தடவையில் சுமார் 6,300 பேர் பயணம் செய்ய முடியும். இந்த கப்பலொன்று 16 அடுக்கு மாடிகளைக் கொண்டுள்ளது. கப்பலின் நீளம் 360 மீற்றர். உயரம் 72 மீற்றர் ஆகும் என்பதோடு, ஒவ்வொரு கப்பலிலும் 2700 அறைகள் காணப்படுகின்றன.

# பாலூட்டிகள்

தமது குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும் உயிரினங்களே 'பாலூட்டிகள்' எனப்படுகின்றன.



மனிதனும் பாலூட்டி இனத்திற்குரிய உயிரினமாகும். பெரும்பாலான பாலூட்டிகள் குட்டிகளை ஈன்று பாலூட்டிப் பேணுகின்றன. கடலில் வாழும் திமிங்கிலங்கள், டொல்ஃபின்கள் என்பனவும் பாலூட்டிகளாகும். வெளவால்களும் பாலூட்டிகளாகும். மிகச் சிறியளவிலான பாலூட்டிக்ளே முட்டையிட்டுக் குஞ்சு பொரித்துப் பாலூட்டுகின்றன. முட்டைகளிலிருந்து வெளியே வரும் குஞ்சுகள், தாயிடம் பால் அருந்தியே வளர்கின்றன. பிளாட்டிபஸ் என்பது முட்டையிடும் உயிரினமாகும். தற்போதளவில் உலகில் 5,416 பாலூட்டி இனங்கள் உயிர் வாழ்வதாக கணக்கெடுப்பொன்று தெரிவிக்கின்றது. இவற்றுள் சில இனங்கள் அழியும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ளன.

# இவ்வார கார்ட்டூன் படம்








இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2015, நொவெம்பர் 18 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 18, 2015.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org